# சைவாலய பரார்த்த பூஜா விளக்கம்



வெளியீடு

தமிழ் வளர்ச்சிக் கழகம்
காரைநகர்


உ
சிவமயம்

# சைவாலய பரார்த்த பூஜா விளக்கம்



வெளியீடு

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**
**காரைநகர்**



# ஆலயக்கிரியைகள்

பராத்தாலய பூஜை கிரியா விதிகள் யாவும் அறிகுறியாகவும் அருள் நெறியாகவும் உள்ளன.

ஆலயங்களில் காலையில் பள்ளியறை திறப்பு முதல் இரவு சயனாலய பூஜை வரை யாவும் இறைவனுடைய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் முறைகளை விளக்குவன.

காலையில் பள்ளியறை திறப்பு சிவமும், சக்தியும் பிரித்து தொழில் படுவதாலுண்டாகும் தோற்றத்தையும், இரவு பள்ளியறை மூடுதல், சக்தியானது சிவத்தில் ஒடுங்கும் போது ஏற்படும் லயத்தையும் குறிப்பன.

பூஜா முறைகளையும் அவற்றில் ஆதாரசக்தி, ஆசனம், மூர்த்தி மூலம் ஆவாஹனம், நியாசம், ஆவரணம், இதன் மந்திரங்கள், தியானங்கள் கலாதிகளாகிய ஆறு அத்துவாக்களின் மந்திரங்களை உற்று நோக்கினால் ஏகமாய் நின்ற இறைவன் முதலில் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை இச்சாசக்திகளாகவும் பின் அகார, உகார, மகார, நாத விந்துகளாகவும் பின் பிரம்மா விஷ்ணு, ருத்தர, மகேஸ்வர, சதாசிவ, மூர்த்திகளாகவும் அவர்கள் மூலம் சிருஸ்டி ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம் அனுக்கிரஹம் ஆகிய ஐந்தொழில்களாகவும் பரிணமித்து நடைபெறும் முறை தெரியவரும்.

நித்திய பூஜையில் அபிஷேகம் சிருஷ்டி நைவேத்தியம், ஸ்திதி, பலிசம்ஹாரம், தீபம், திரோபவம், விபூதி அனுக்கிரஹம் என்பன பஞ்சகிருத்தியங்களாகும்.

ஆலயங்களில் மந்திரலோபம், கிரியாலோபம், திரவிய லோபம் இல்லாதபடி ஆராதனைகளைச் செய்ய வேண்டும்.

ஆற்றரு நோய்மிகும் அவனி மழைஇன்றி
போற்றரு மன்னரும் போர்வலிகுன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோயில்களானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே

# பூஜா பேதம்

சிவாகமங்களில் பூஜா விதியானது ஆத்மார்த்தம், பரார்த்தம் என இருவகையாக விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு பூஜை முறைகளில் வேறுபாடுகள் அதிகம் காணப்படவில்லை.

பூஜகனுக்கு மாத்திரம் ஆன்ம லாபத்தைக் கொடுக்கும் ஆன்மார்த்த பூஜையில் பள்ளியறை பூஜை, உற்சவம் முதலிய சில கிரியைகள் இடம் பெறவில்லை.

உலக நன்மையின் பொருட்டும், அங்குள்ள சகல ஜீவராசிகளின் நலத்தின் பொருட்டும் செய்யப்படும் பராத்தாலயப் பூஜைக்கு சில கிரியைகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

ஆன்மார்த்த பூஜை என்பது ஆதிசைவர் அல்லது அவர் அனுமதி பெற்றவர்களிடம் சமய விசேஷ தீக்ஷை பெற்ற அதிகாரிகள் குருவினால் உபதேசிக்கப்பட்ட மூலமந்திரத்தினால் குறிக்கப்படும் தெய்வங்களை தமது இல்லங்களில் வைத்து பூஜிக்கப்படுவதாகும்.

பரார்த்த பூஜை என்பது கிராமத்திலோ, நகரத்திலோ, வனங்களிலோ, மலைகளிலோ, நதிதீரம் அல்லது சமுத்திரங்களிலோ, உள்ள ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகளை முறைப்படி மாதொருபாகனார்க்கும் வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்தில் தோன்றிய ஆதி சைவ சிவாசாரியர் ஆகமத்தில் விதித்தவர்களைக் கொண்டு பூஜிப்பதாகும். பரார்த்த பூஜை என்பது, நித்தியம், நைமித்தியம், காமியம் என மூன்று வகைப்படும்.

ஆதி சைவர்களும் ஆன்மார்த்த பூஜை செய்த பின்னரே பரார்த்த பூஜையைச் செய்ய வேண்டும், அவர்கள் ஆகமத்தில் கூறியபடி அபரம்,

பரம் ஆகிய இரண்டு சமஷ்காரங்களுடன் சமயம், விசேஷம், நிர்வாணம், அஸ்திராபிஷேகம், ஆச்சாரயாபிஷேகம், சிகாச்சேதனம், ஏழு விஷவங்க ளின் சோதனம் செய்த பின் பரார்த்தாலயத்தில் நித் திய, நைமித்திய, காமிய முதலிய கிரியைகளைச் செய்ய பூரண உரிமையுடையவர் ஆவார். சமய தீட்சை, விசேச தீட்சை இரண்டும் பெற் றவர், நித்திய பூஜைக்கு அருகதை யுடையவர் என்றும் சிவாகமம் விதிக் கின்றது.

ஆதிசைவர்கள், முன்பு சிருஷ்டி காலத்திலேயே சிவபெருமானால் தீக்ஷைசெய்திருப்பினும், இங்கு மானிடதேஹத்தோடு சம்பந்தப்பட்ட தால் குருவருளை நாடி சிவதீக்ஷை பெறுதல் அதன்படி ஆசரித்தல் முதலியவற்றை அவசியம் கைக்கொள்ள வேண்டும்

ஆதிசைவ ஆசாரியருக்கு சம்ஸ்காரம் ஏழாகும். அஃது சமயம், விசேஷம், நிர்வாணம், அஸ்திராபிஷேகம், ஆச்சாரியாபிஷேகம், சிகாச் சேதனம் ஏழுவிஷவங்களின் சோதனம் என்பவனவாம். அவ்வாசாரி யனுக்கு மகாகாரணபஞ்சாக்ஷரம் உபதேசிக்கத்தக்கது. அவர் நித்தியம், நைமித்தியம், காமியம் முதலிய பூஜைகளுக்கு அருகராவார், இந்த ஆதி சைவ ஆச்சாரியர் தனது மனைவியுடன் இந்த ஏழு சம்ஸ்காரங்களையும் செய்து கொள்ள வேண்டும், தனது ஸ்திரி இல்லாமல் தீக்ஷைசெய்து கொண்டால் கர்ஷணம், பிரதிஷ்டை, தீக்ஷை, உற்சவம், நித்தியபூஜை முதலியவைகளில் அச்சாரியராய் நியமித்தல் கூடாது. மறுபடியும் மனைவியுடன் தீக்ஷை ஆச்சாரியாபிஷேகாதிகள் செய்து கொண்டால் ஆசாரியாராம் சங்கிருஹித்தல் கூடும்.

தீக்ஷைபெற்ற ஆதிசைவர்களுள் பிரும்மசாரியும், அபத்னீகனும் ஆல யத்தில் நித்திய பூஜை செய்யலாம். நைமித்திய கிரியை செய்யத் தகுதி யில்லை என்பதாம்.

வனத்திலுள்ள யானையானது சிங்கத்தைக்கண்டு எப்படி பயத்தை அடையுமோ அப்படியே தீக்ஷையில்லாதோர் பூஜை செய்தால் பிம்பத் தில் மூர்த்தி ஆவிர்ப்பவித்து விளங்க அஞ்சுவர். இதனால் ஆத்மார்த்த பரார்த்த பூஜாதிகாரிகள் அவசியம் சிவதீக்ஷை பெறல் வேண்டும். ஆலய ஊழியர்களும் சேவை செய்பவர்களும் தீக்ஷை பெற்றுத்தான்

தம்தம் தொழிலைச் செய்ய வேண்டுமென சிவாகமம் விதிக்கிறது.

அர்ச்சகர்கள் என்ற ஆதிசைவ சிவாசாரிய அந்தணர்கள் நம் தமிழ் நாட்டில் ஏதோ இடைக்காலத்தில் தோன்றியவர்கள் என்று கருதமுடியாது. ஏனென்றால் சங்ககாலத்திலலேயே ஆதிசைவ அந்தணர், கோயில் ஆராதனைகளைச் செய்து வருவதை தருமிக்கு 'பொற்கிழி' அளித்த வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. ஆகமங்களும் சைவசமய நெறி முதலிய தமிழ்நூல்களும் ஆதிசைவர்கள் தான் ஆத்மார்த்தமும் பரார்த்தபூஜையும் செய்ய வேண்டுமெனவும், மற்றுமுள்ளவர்கள் ஆலயபூஜை செய்வது விதிகளுக்கு விரோத மாகும் என்றும் கூறுகிறது.

அரிய சதாசிவனென்போன் அனாதிசைவன் அவன்பால்
அவதரித்த சிவமறையோர் ஆதிசைவர் - எனவும்
சிவன் முகத்திலே யுதித்த விப்ரசைவர்
இவரே யர்ச்சனைக்கென்றென், - எனவும் கூறுவானும்
அயன் முகத்தில் தோன்றிய அந்தணர் அர்ச்சித்துப்
பயனடைதற்கிட்ட லிங்கம் பாங்கு - எனவும்

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே,

- என்பதாலும் அறியக் கிடக்கின்றது.

ஆகவே ஆதிசைவ சிவாசாரியார்கள், தமிழ் நாட்டில் சங்க காலத்திற்கு முன்பிருந்தே அநாதிகால முதல் கோயில் தோன்றிய காலத்திருந்தே ஆலய வழிபாடுகளைச் செய்து வருகிறார்கள் இவர்கள் திராவிட தேசத்தவர்கள். யஜுர் வேதத்தை முக்கியமாய் கொண்டவர்கள். ஆதலால் க்ஷ வேதத்தில் இவர்களுக்கு திராவிட பாடம் என்ற ஒரு பேதம் இருந்து வருகிறது. இதனை யே இவர்களும் இவர்களின் முன்னோர்களாகிய

பத்ததிகர்த்தர்களும் கையாண்டு வந்திருக்கிறார்கள்.

கந்தபுராண ஆசிரியர் காஞ்சி கச்சியப்ப சிவாசாரியாரும், திருத் தொண்டத் தொகை தந்த நம்பியாரூரராகிய ஆலாலசுந்தரரும், திருமு றையாக வகுத்துத்தந்த நம்பியாண்டார்நம்பிகளும், பிரம்மசூத்திர சைவ பாஷ்ய குருவான சுத்தாத்வைத சைவ சித்தாந்த பிரவர்த்தகாசரரி யராகிய நீலகண்ட சிவாசாரியரும், சித்தாந்த சாத்திரம் போதித்த சகலா கம பண்டிதரான அருணந்தி சிவாசாரியரும், பதினெண் பத்ததிகர்த்தர் களும், ஆதிசைவ அந்தணர்களே. நம் சமயத்தையும் சாத்திரத்தையும் தோத்திரத் தையும் வளர்த்தவர்கள் ஆவார்கள்.

பரார்த்த பூஜை ஆதி சைவர்களாகிய ஒரு சமூகத்தவர்களுக்கே உரியதென்றால் அவர்கள் விசேஷ கல்வி, அறிவு பெறாதவர்கள் பூஜை செய்தல், மருத்துவநூல் கற்காதவர்கள் வைத்தியஞ்செய்யவும், இஞ்சின் ஓட்ட கற்காதவர்கள் அதைச் செய்யவும் கூடாதவாறு போல ஆகமங்களைத் தெளிவுறக் கற்காதவர்களும் பூஜை முதலியன செய்தல் கூடாதென்று சிலர் சொல்வது இதற்குப் பொருந்தாது. ஏனென்றால் மருத்துவம் செய்வதும், இஞ்சின் ஓட்டுவதும், பூஜைசெய்வதையும் ஒன்றாக வைத்து எண்ணத்தக்கவை அல்ல. மருத்துவமும், இயந்திரமும், முறைப் பிழையாலும், விதிவசத்தாலும், கேடுவிளைவக்கும். பூஜையா னது தெரிந்து செய்தாலும், தெரியாது செய்தாலும் நற்பயனையே தரும் என்பதாம். விதியின் வழி சிவகோசரியாரும், அதன்பின் வழி கண்ணப்பநாயனாரும், பள்ளியில் பயிலும் நம்பியாண்டார் நம்பி களும் பூஜித்து பயன் அடைந்ததே இதற்குச் சான்றாகும்.

இதனை உணர்ந்தே பண்டைய அரசர்கள் முப்போதும் திருமேனி தீண்டுவாராகிய ஆதிசைவ சிவாசாரிய மரபினர்களுக்கு பரார்த்த பூஜை பரம்பரை பாத்தியமும் சர்வமானியமும் கொடுத்துப் பாராட்டினர்.

விசேட கல்வி அறிவு இல்லையேனும் சாதாரண கல்வி அறிவு கொண்டு நித்திய கர்மானுஷ்டானம்போல பரார்த்தாலய பூஜையை ஆதிசைவ மரபினர் செய்வதற்கு உரிமை உடையவர் என்பதாம், வேண்டுமாயின் உதவியாக ஆதிசைவர்களுள்ளே ஜாதகாசாரியரை

நியமித்து மந்திரலோபம் இல்லாதபடி செய்வதுதான் உசிதமாகும். எதுபோலெனில் மற்றும் உபசாரங்கட்காக இவர்களின் உதவியாக அத்யயனபட்டர்களையும், தேவாரம் ஓத ஓதுவாமூர்த்திகளையும் நியமித்திருப்பது போல என்பதாம். இப்படி நியமித்து பின் பூஜகர்களுள் மந்திரம் முதலியவற்றை தெரிந்தவர்கள் சொல்லக்கூடாதென்றோ, அந்த உரிமை அவர்கள் வம்சத்திற்கே போய்விட்டதென்றோ கருதக்கூடாது. பூஜை செய்பவருக்குத் தான் வழிபாட்டுக்கு உரிய மந்திரங்களையும், வடமொழி வேதங்களையும், தமிழ்வேதமாகிய தேவாரம் முதலிய திருமுறை தோத்திரங்களையும் சொல்வதற்கு பூர்ண அதிகாரம் உண்டு என்பதாம். பூஜகரின் உதவிக்காகவேதான் சாதகாசாரியரையும், வேதம் ஓதுதற்கும் அர்ச்சனை நாமாவளி சொல்வதற்கும் அத்யயனபட்டர்களையும், தமிழ் வேதமான திருமுறை ஓதுதற்கு ஓதுவார் மூர்த்திகளையும் நியமித்திருப்பதாகவே கருத வேண்டும்.

இவ்வளவு தொன்மையும் பெருமையும் வாய்ந்த ஆதிசைவ மரபு இக்காலத்தில் மக்களிடையே சமயப்பற்று குறைவினாலும், காலமாறுபாட்டாலும், சாத்திரப் பயிற்சி போதாமையாலும், துவேஷம் பரவியதாலும், மக்களின் பரிபூர்ணமான அன்பைப் பெற முடியாமல் கூலிக்கு பூஜை செய்பவர்களால் அதிகாரிகளிடமும் சேவார்த்திகளிடமும் மிகவும் பணிவாகவும் பயந்தும் காலங்கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இறைவன் தான் துணை செய்யவேண்டும்.

சம்ஸ்கிருதம் நம் இந்துக்களின் மதபாஷையாகும். அது நல்வளமுள்ள பாஷை. அது எந் நாட்டவர்க்கும் பொதுபாஷை அந்த பொலிவுள்ள பாஷை மதசம்பந்தமான இலக்கியங்களுடன் கூடியவைகளாகும், இத்துடன் தேவபாஷை என்றும் இதனைக் கூறுவர். இது உச்சரிப்பு பேதங்களுடன் கூடியவை. கிரந்தம், நாகரம் முதலிய எழுத்துக்களில் கிரந்தமாகிய கீர்வாணா க்ஷரமே, பூஜையந்திரம் முதலியவைகட்கு பீஜா அட்சரங்களாக எழுதுவதே மிகச்சக்திவாய்ந்தவையாம். ஆதலால் நம் முன்னோர்கள் வடமொழியையும், செந்தமிழையும், சமயத்தையும், சாத்திரத்தையும், தோத்திரத்தையும் தெய்வ வழிபாட்டில் மந்திரம் கிரியை பாவனைகளுடன் ஒருங்கே வளர்த்து வந்துள்ளார்கள்.

அரி, அயன், முதலிய தேவர்களும், ரிஷிகளும், மானுடரும், மிருகம், பறவை, ஊர்வன முதலியவைகளும் பூஜைவழிபாடுகள் செய்து நற்கதி அடைந்திருக்கும். திருக்கோயிலில் மானிடர் முதலிய உயிர்இனங்கள் யாவும் நற்கதி அடையும் வண்ணம் பரார்த்தமாக அன்றும், இன்றும், என்றும் ஆலய பூஜையை ஆதிசைவ சிவாசாரியர்களே செய்து வரு கிறார்கள். மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் முடிந்த அளவு தீக்ஷைபெற்று ஆத்மார்த்த பூஜை செய்யவேண்டியது அவசியமாகும். இப்பூஜையே அக்னி, ஹோத்ரி முதலிய சகல கர்மாக்களைச் செய்வ தாகும். இத்துடன் சன்னியாசம் முதலிய ஆஸ்ரமங்களை அடைந்த பலனும், அதனின் மேலான போக மோக்ஷமும் கிடைக் கும் என்பதாம்.

சாக்தேய தந்திரமான ஆலயங்களிலும், ஆதிசைவர்கள் பூஜை, உற்சவம், பிரதிஷ்டை முதலியன செய்தல் முறை. இது உத்தமம். ஆதிசைவ சிவாசாரியர்களிடம் திக்ஷைபெற்ற சைவ ஓதுவாமூர்த்திகள் நித்திய பூஜை செய்யலாம். இதுமத்திமமாகும். பார சைவர் பூஜிப்பது அதமமாகும். இருபிரிவினர்களும் நித்திய பூஜை செய்யலாமேயொ ழிய நைமித்திய காமிய கிரியைகள் செய்யக்கூடாதென சிவாகமம் விதிக் கிறது.

## கிரியாபேதம்

காலசந்தி பூஜையில் முதலில் சூரிய பூஜை செய்து பின் விநாயகர் மூலமூர்த்தி முதலிய பரிவார தேவதா பூஜைகளைச் செய்ய வேண்டிய தாகும்.

சாயரக்ஷையில் முதலில் சந்திரனைப் பூஜித்து பின்முன்னுள்ள படி எல்லாமூர்த்திகளுக்கும் கிரமமாய் பூஜை புரிதல் வேண்டும். காலசந் தியிலும், சாயரக்ஷையிலுமே பரிவார மூர்த்திகளுக்கு பூஜை மற்றக் காலங்களில் நடைபெறுகிற பூஜையில் பரிவார மூர்த்தி பூஜை இடம் பெறவில்லை

காலசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை இம் மூன்று வேளைகளிலே துவார பூஜை, ஸ்நபனம், நித்தியாக்னிகாரியம், நித்தியோற்சவம், ஸ்ரீபலி

இவைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இரவு அர்த்தஜாம காலத்தில் முன்கூறியவாறு அபிஷேக அலங்கார நிவேதனம் செய்து முதலில் அம்பாள் சன்னதியில் தீபாராதனை முதலிய பூஜை முடித்து பின் சுவாமி ஆலயத்தில் சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், நடேசர், மூலமூர்த்தி இப்படி ஒழுக்ககிரமமாய் பூஜித்து திரையிட்டு பாதுகாராதன பிம்பத்தில் மூர்த்தியை ரகசிமாய் சம்யோஜித்து பூஜீத்து சிவிகையிலேற்றி சகல உபசாரங்களுடன் பள்ளியறையில் சேர்த்தல் வேண்டும். ஆலய பிரதக்ஷணம் கூடாது; ஏனெனில் அர்த்தஜாம காலத்தில் எல்லா கலாசக்திகளும் ஒடுங்கிய மூர்த்தியானதால் லயஸ்தானத்தை அடைவதின் பொருட்டேயாம்.

பின் சக்தி ஆலயத்தில் திரையிட்டு அங்குள்ள சயனாலய பிம்பத்தில் அல்லது பீடத் திரிகோணத்தில் சக்தியை ரகசிய பூஜையுடன் சம்யோஜித்து ஆராதனை முடித்து சயனாலயத்தில் சுவாமி பாதுகையின் இடப் பக்கத்தில் சக்தி பிம்பத்தை வைத்து பள்ளியறை பூஜை செய்யவேண்டும். மறுதினம் அதிகாலை பள்ளியறை திறந்த பூஜை முடித்து முதலில் அம்பாள் பிம்பத்தை சக்தி ஆலயத்தினுள் சேர்த்து மூலமூர்த் தி பிம்பத்தில் சம்யோஜித்து திரை நீக்கி நீராஞ்சன உபகாரம் செய்துபின் நடராஜர், உற்சவர், சந்திரசேகரர் ஆகிய மூர்த்திகளுக்கும் இதன்படி தோற்றக்கிரமமாய் உபசரித்து வழிபடல் வேண்டும்.

உற்சவ காலங்களில் பள்ளியறை பூஜைக்கு சுவாமி பல்லக்கில் எழுந்தருளலில்லாமல் சங்கிரமமாய் ஆசாரியர் கொண்டு வைத்து வழிபாடுகளைச் செய்ய வேண்டியதாகும்.

## பூஜாக்கிரமம்

சிவசூரியன் அல்லது சந்திரன் அதன்பின் முதலில் அனுஞ்ஞை விநாயகருக்கும், பின் துவார விநாயகர் சுப்பிரமணியர், மூலஸ்தான மூர்த்தி போகசக்தி உள்நந்தி நடராஜர் உற்சவர், சந்திரசேகரர் முதலிய மஹேஷ பேதங்களுக்கும், இதன்பின் உள்பிரகாரத்திலுள்ள பரிவார மூர்த்திகளுக்கும், பின் தேவிக்கும், பின் இரண்டாம் அல்லது வெளிப் பிரகாரத்

திலுள்ள பரிவார தேவதா மூர்த்திகளுக்கும், வெளிநந்தி கொடிமரம் முதலிய தேவதைகளுக்கும் முறையே நிவேதனம் செய்து தீபாராதனை முதலிய உபசாரங்கள் புரிந்து நித்திய ஹோமம், நித்திய உற்சவ பலி போட்டு சமர்ப்பித்து பின் சண்டேசர் பூஜை வரை வரிசைக் கிரமமாய்ச் செய்ய வேண்டியதாகும்.

## சண்டேஸ்வர பூஜை

பூஜையின் முடிவில் ஒவ்வொரு காலத்திலும் சண்டேஸ்வர பூஜை செய்வது விசேஷம். அல்லது உச்சிக்காலத்திலும் அர்த்த ஜாமத்திலும் இவ்விரண்டு வேளைகளிலும் அல்லது அர்த்தஜாமத்தில் ஒரு வேளை யாயினும் அவசியம் செய்ய வேண்டியதாகும்.

## வைரவர் பூஜை

பூஜையின் ஆரம்பமாகிய அதிகாலையிலும், இராத்திரி அர்த்தஜாம பள்ளியறை பூஜை முடிவிலும் ஆக இவ்விரு வேளைகளிலும் க்ஷேத்தி ரபால (வைரவர்) பூஜைசெய்தல் வேண்டும்.

## ஆராதனம்

இந்த ஆராதனக் கிரியைகளில் பிம்ப, கும்ப, யந்திர பூஜைகள் ஹோமங் கள் யாவும் பூஜகரே மந்திரம் கிரியை பாவனைகளுடன் செய்ய வேண் டியதாகும். அன்னியர்கள் செய்தால் நிஷ்பலனாகும் என்பதாம்.

ஆசன, ஆவாஹன, ஆவரண பூஜை விரிவாக நடைபெறும் போது அது போகாங்க பூஜை எனப்படும். ஆவரண பூஜை இல்லாமலும் தனித்தனி இல்லாமல் தொகுப்பாக நடைபெறும் பொழுது அது லயாங்க பூஜை எனப்படும்.

மூர்த்தி பூஜையின் முக்கியம் ஆவாஹனம் அல்லது மூர்த்தி அழைப்பு அதாவது பூஜகர் அந்தர்யாமியாயுள்ள இறைவனை அந் தந்த மூர்த்தி ஸ்வரூபமாக அகத்து பாவனை செய்து ஆகமங்களில்

கூறப்பட்ட உருவத்தோடு மூர்த்தியானவர் தேஸோ மயமாக, பிம்பத்தில் நியாசங்கள் செய்து தியானத்துடன் ஆவாஹித்து ஸ்தாபித்தலாகும். முறைப்படி ஆவாஹனம் செய்யின், அழைக்கப்படும் தேவர்களும் மூர்த்திகளும் பிரசன்னமாகின்றனரென்பது ஆகமங்களின் துணிபு.

சிற்றறிவும், சிறுதொழிலுமுடைய பூஜார்ச்சகர் உரிய மந்திரம், முத்திரை பாவனைகளால் மூர்த்தியை தன்னிடம் வியாபகமாக்கி தான் மூர்த்தியுடன் ஒன்றிநின்று இந்த ஆவாஹனம் செய்ய வேண்டுமாதலால் ஆரம்பத்தில் பூஜகர் தம்மீது தாமே நியாசம் முதலியன செய்து கொள்ளப்படுகிறார் என்பதாம். மூர்த்திகளை அழைக்கும் உரிமை ஆத்மார்த்த பூஜகருக்கும், பரார்த்த பூஜகருக்கும் தீக்ஷைகள் மூலம் உரிய அதிகாரம் அளிக்கப்படுகின்றன.குறிப்பிட்ட மூர்த்தியை தம்மிடம் வியாபகப்படுத்துவதே நியாசமா கும்.

## பூஜகரின் பாவனைகள்

பூஜகர்கள் ஆவாகனகாலத்தில் குருரூபாமாகவும், அபிஷேக அலங்கார சமயத்தில் தாய்ரூபமாகவும், நைவேத்தியம் அர்ச்சனை தூபம் தீபம் இந்தக் காலங்களில் மந்திர வடிவமாகவும், தோத்திரம் பிரக்ஷணம் செய்யும் காலத்தில் பக்தரூபனாகவும் பாவித்து பூஜை முதலிய வழிபாடுகளைச் செய்கின்றான் என்பதாம்.

## பூஜா காலங்கள்

ஆலயங்களில் பொருளாதார நிலைக்குத்தக்கவாறு ஒவ்வொரு நாளிலும் 12 காலம் 9-8-7-6-5-4-3-2-1 ஆக நிர்ணயித்து பூஜா காலங்கள் நடைபெறும் . ஒவ்வொரு காலங்களிலும் அபிஷேகாதிகள் இடம்பெறும் முடியாதபக்ஷத்தில் உஷக்காலம், காலசந்தி அல்லது உச்சிக்காலம் சாயரக்ஷை, அர்த்தஜாமம் இவைகளில் செய்யலாம். அதுவும் முடியாதாயின் காலை, மாலை இரண்டு வேளைகளில் அல்லது காலையில் ஒரு வேளைமட்டிலுமாவது செய்யவேண்டும்.

சில ஆலயங்களில் வாரத்திற்கு ஒரு முறையும், அல்லது பக்ஷத்திற்கு ஒரு முறையும், அல்லது மாதத்திற்கு ஒருமுறையும் பூஜை வழிபாடுகள் நிகழ்தலுண்டு.

நித்திய பூஜையானது நித்தியம் என்றும், ஆகந்துகநித்தியம் என்றும் இருவகைப்படும். அவையாவன

1. நித்திய பூஜை என்பது தினந்தினம் செய்யும் உஷக்காலம் முதலிய பூஜையாம்.
2. ஆகந்துக நித்தியபூஜை என்பது மாதந்தோறும் செய்யப்படும் விசேஷ பூஜையும் அஷ்டமி, விஷு, சங்கிராந்தி, பிரதோஷம், அமாவாசை முதலியவைகளில் செய்யப்படும் பூஜையாம்.

# பன்னிரண்டு கால பூஜா விபரம்

| | |
|---|---|
| 1. உஷக்காலம் | 7. சாயங்காலம் |
| 2. பிராதக் காலம் | 8. சாயரக்ஷை |
| 3. காலமத்யசந்தி | 9. அர்த்தஜாமம் |
| 4. த்விதீயகாலசந்தி | 10. பூதராத்திரி |
| 5. மத்யசந்தி | 11. காலராத்ரி |
| 6. உச்சிகாலம் | 12. மகாநிசி |

இவை சூரிய உதயத்திற்கு முன் 3.45 நாழிகை முதல் உதயம் வரை உஷக்காலம். இவ்வேளையில் உதயமார்தண்டமல்லது விழாபூஜையும், உதயம் முதல் 10 நாழிகை பராதக்காலம், இவ் வேளையில் 2 முதல் 5 வரை உள்ள காலங்களும் நித்தியோற்சவமும், இதன்மேல் உதயமு தல் 16 நாழிகைக்குள் உச்சிக்காலமும், நித்தியோத்ஸவமும் சூரியஸ் தமனத்திற்கு முன் 3.45 நாழிகையும் பின் 3.45 நாழிகையும் ஆக 7.30 நாழிகைக்குள் நித்தியபிரதோஷ பூஜையாகிய சாயங்கால பூஜையும், அதன்மேல் அஷ்தமனமுதல் 11.15 நாழிகை வரையுள்ள காலம் அர்ததஜாமம் எனப்படும். இவ்வேளையில் சூரியஸ்தமன முதல் 9 நாழிகைக்குள் இராத்திரி சந்தியாகிய இரண்டாம் காலம் என்ற இராக்கா லமும் இதன் மேல் 2.15 நாழிகைக்குள் அர்த்தஜாமம் ஆகிய ஏகாந்த

பூஜையும் இதன் மேல் அஸ்தமன முதல் 21.15 நாழிகைக்குள் 10 முதல் 12 வரையுள்ள கால பூஜை நடைபெற வேண்டும்.

## ஆறுகாலப் பூஜை விபரம்

சூரிய உதயம் தொடங்கி 10 நாழிகை பிராதக்காலம், காலசந்தி அதன்மேல் 10 நாழிகை மத்தியான காலம், உச்சிக்காலம் அது முடிந்து 10 நாழிகை சாயங்காலமாகும். இதில் சூரியஸ்தமனத்திற்கு முன் 3.45 நாழிகை பிரதோஷகாலம் இது நித்திய பிரதோஷம் என்பதாகும். சூரியாஸ்தமன முதல் 7.30 நாழிகை சாயரக்ஷை இரண்டாங்காலம். அதுமுடிந்துமேல் 3.45 நாழிகை அர்த்த ஜாமம். சூரிய உதயத்திற்கு முன் 3.45 நாழிகை உஷக்காலம். ஆகவே உஷக்காலம் அல்லது விளா பூஜை காலசந்தி உச்சிக் காலம், சாயங்காலம் அல்லது சாயரக்ஷை இரண்டாம் காலம் அர்த்த ஜாமம், ஆக 6 கால பூஜையாகும் என்பதாம்.

## மந்திர பேதம்

ஆவாஹனம், பாத்யம், ஆடைதரித்தல், சந்தணம் பூசுதல், ஆபரண மணிதல், கண்ணாடி, குடை, சாமரம், ஒலைவிசிறி, ஜெபம்ஸ் தோத்திரம், நமஸ்காரம், இவைகளில் **நம**; என்னும் நாமத்தை முடிவுடைய மந்திரம் உச்சரிக்க வேண்டும்.

அருக்கியம், அபிஷேகம், தூபம், தீபம், நைவேத்தியம், நீர், முகவாசம், நீராஞ்சனம், பவித்திரம், ஜெபசமர்ப்பணம், ஆன்ம சமர்ப்பணம், ஓமம் இவைகளில் **சுவாஹா** என்னும் பதத்தை முடிவாகவுள்ள மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

நனைத்தல், துடைத்தல், புஷ்பம் சாத்துதல், பூர்ணாகுதி இவைக்ளில் **வௌஷட்** என்னும் பதத்தை இறுதியாக உச்சரிக்க வேண்டும்.

அபிஷேகம், சுத்திசெய்தல், பாசச்சேதம், புரோக்ஷணம், தாடனம், பேதனம், விக்னங்களைப் போக்குதல் இவைகளில் முடிவில் **ஹூம்பட்**

என்பதை உச்சரிக்க வேண்டும்.

ரக்ஷையில் பட் என்பதை முடிவாக உச்சரிக்க வேண்டும்.

ஆசமனத்தில் சுவாதா என்று உச்சரிக்க வேண்டும்.

கவசவேஷ்டனத்தில் ஹூம் என்று உச்சரிக்க வேண்டும்.

இந்த விதமாய் சப்தகோடி மஹா மந்திரங்களை உச்சரிக்கும் முறை தெரிந்து கொள்ள வேண்டியதாகும்.

# திரையிட வேண்டிய காலங்கள்

அபிஷேக, அலங்கார, ஆவாஹன, ஆசன, ஆவரண, நைவேத்திய பூஜா காலங்களிலும், இரவு இரகசிய பூஜா காலங்களிலும் திரையிடுதல் வேண்டும். **திரையிடப்பட்ட காலங்களில் பக்தர்கள் தரிசனஞ் செய்யக்கூடாது** என்பதாம். இதனை அறியாத பக்தர்கள் பலர் இன்று திரையிட்ட பின்பும் தரிசனம் செய்கிறார்கள்.

அபிஷேகத்தின் போது விபூதி, சந்தனம், அபிஷேகமானவுடன் திரையை நீக்கி, பக்தர்கள் கற்பூரதரிசனம் செய்யலாம் என ஆகம விதி கூறுகிறது.

ஸ்நபன சங்காபிஷேகத்தின் போதும் தரிசனம் செய்யலாம் என்பதாம். மாத பூஜா வழிபாட்டில் வருகிற அபிஷேக விசேஷ திவ்ய காலத்திலும் தரிசனம் செய்யதல் விசேஷமாகும்.

# நித்திய பூஜை இரண்டுவித பேதம்

நித்தியபூஜை என்பது நித்தியம் என்றும், அகந்துகநித்தியமென்றும் இருவகைப்படும்.

நித்தியபூஜை என்பது தினமும் செய்யப்படும் உஷக்காலம் முதலிய பூஜையாகும்.

அகந்துக நித்தியமென்பது மாதந்தோறும் செய்யப்படும் விசேஷ பூஜையும், அஷ்டமி, விஷூ சங்கிராந்தி, பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி முதலியவைகளில் செய்யப்படும் பூஜையாம்.

புனராவர்த்தன பிரதிஷ்டைக்காக செய்யப்பட்ட பாலாலய மூர்த்திக்கும், நித்தியோற்சவ முதலிய வார, பக்ஷ, மாத உற்சவங்களும் செய்யலாம். மஹோற்சவம் செய்ய விதியில்லை.

## நித்திய நைமித்திய காலம்

நித்தியத்துடனேயே நைமித்திகமும் சேர்த்துச் செய்ய வேண்டும். எவ்வாறெனில் நித்திய ஸ்நானத்துடன் நைமித்திக ஸ்நானமும், இவ்வாறே நைவேத்யம், ஓமம், பலி, தூபம், தீபம் எல்லாம் செய்ய வேண்டியதாகும்.

பிராயச்சித்தங்களும், நித்திய காலத்துடன் செய்ய வேண்டும். ஆகவே நித்தியம், நைமித்தியம், காமியம் யாவும் நித்திய காலத்துடனேயே செய்தால் சர்வசித்தியும் உண்டாகும். இப்படிச் செய்வதால் சந்தியாதிக்கிரமண தோஷம் கிடையாது. சாஸ்திரத்தை அதிக்கிரமித்தால் தோஷமுண்டு என்பதாம்.

## நித்திய பூஜை பிராயச்சித்தம்

ஒருகாலம் பூஜை தவறினால் மறுகாலத்தில் இரட்டிப்பாகச் சேர்த்துச் செய்யவேண்டும். இரண்டு காலம் தவறினால் சாந்தி ஹோமம் செய்து பூஜிக்க வேண்டும். மூன்று காலம் தவறினால் பஞ்சகவ்வியாபிஷேகம் செய்து பூஜிக்கவும், இரவு பகல் ஒருநாள் தவறினால் ஸ்நபனம், சாந்திஹோமம் செய்ய வேண்டும். ஐந்து நாட்கள் தவறினால் மூர்த்தி ஹோமம் செய்ய வேண்டும். பதினைந்து நாள் ஒரு பக்ஷம் விட்டுப் போனால் திசாஹோமத்துடன், ஸ்நபனம், சாந்தி ஹோமம் செய்து பூஜிக்கவும். ஒரு மாதத்திற்குமேல் இல்லாவிடில் சம்புரோக்ஷணம் செய்ய வேண்டும் என்பதாம்.

ஆலயத்தினுள்ளும், பிரகாரத்திலும் மரணம் சம்பவித்தால் அதற்குத் தக்க பிராயச்சித்தாபிஷேகம் செய்து பூஜை செய்ய வேண்டும். பிரகாரத்திற்கு வெளியில் கோயில் மண்டபத்தில் மரணம் நேரிட்டால் வாஸ்துசாந்தி, சுத்திபுண்ணியாஹம் செய்த பின்னரே நித்தியபூஜை புரிதல் வேண்டும். கோவில் பக்கத்திலுள்ள வீதியில் மரணம் ஏற்பட்டால் அவை அப்புறப்படுத்தப்பட்ட பின்பே நித்தியபூஜை புரிதல் வேண்டும்.

இவை கோவிலுக்கு வெளியில் 50 (பாகம்) தண்டத்திற்கு வெளியிலேற்பட்டாலும், அல்லது மத்தியில் க்ஷேத்ரவீதி இருந்து அதற்கு வெளிவீதியில் ஏற்பட்டாலும் இந்த நியமமில்லாமல் முறைப்படி நித்திய பூஜையை செய்வதால் தோஷமாகாது. பூஜகனும், அரசனும், ஸ்தலாசாரியனும் இறப்பானாகில் சர்வோபசாரத்துடன் அந்த அந்திம கிரியை செய்த பின் இறைவனுக்கு விசேஷமாக ஸ்நபன சாந்திஹோமம் செய்து நித்திய பூஜையைச் செய்ய வேண்டும்.

சூரிய உதயத்திற்கு 3.45 நாழிகைக்கு முன் பஞ்சமஹாசப்தம் கோஷிக்கச் செய்ய வேண்டும். அதாவது தாருஜம், கட்டையிலிருந்து உண்டானது. சங்கஜம் சங்கிலிருந்து உண்டானது. லோஹஜம் வெண்கலத்திலிருந்து உண்டானது; சுஷிரஜம் துளையிலிருந்து உண்டானது; சேயம் பாட்டிலிருந்து உண்டானது ஆகும். இவை சகல பிராணிகளுடைய இருளைப் போக்கும் என்பதாம்.

## ஆலய சுத்தி

அதிகாலையில் ஆலயத்தில் அலகிட்டு நீர்தெளித்து மெழுகுதல் முதலியன நடைபெறும் இது ஸ்தூலசுத்தியாம். அடுத்தது புண்ணியாகம். அது ஆசாரியர், மந்திரத்துடன் நீர் தெளித்தல் இவை ஷ்மசுத்தியாகும். இதனாலேதான் "நம்பியான் தெளித்தது தீர்த்தம்" என்ற வாக்கியம் எழுந்தது. இந்த சூக்ஷ்ம சுத்தி அநேகமாக நடைபெறுவது நின்று விட்டதென்றே கூறலாம்.

ஆலய நிர்வாகிகள் ஆவனசெய்தால் சாஸ்திர விதியைக் கடைப்பிடித்

தவராவார். அது பெரும் புண்ணியமும் பயனும் ஆகும். இதன்பின் வைரவர் பூஜையாகும்

## வைரவர் பூஜை

ஆச்சாரியர் வைரவர் ஆலயம் அடைந்து விதிப்படி பூஜித்து தயிர், அன்னம், பால், பொரி, தாம்பூலம் நிவேதித்து நீராஞ்சனா உபசாரங்கள் செய்து பிரார்த்தனை செய்வர். அதாவது பூமியிலுள்ள எல்லா உயிர் வர்க்கங்களைளயும் ரக்ஷிப்பதற்கான (சிவ) இறைவன் பூஜையை செய் வதற்காக முத்திரா் தண்டத்தை தந்தருளும் என்று பிரார்த்தித்து அங்குச முத்திரையால் முத்திரைக்கோலை (பட்டர்) பூஜகர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்பிராத்தனை பரார்த்த சங்கல்பத்தை வெளிப்படுத்துகிறது. இதனாலேதான் ஆலயத்தின் நிறவுகோல்கள் பூஜகர்களாகிய ஆதிசை வர்களிடமே இருந்து வருகிறது எனலாம். இப்போது அதிகாரிகளால் நியமிக் கப்படும் வேறுசிலரிடமும் இருந்து வருகின்றன.

க்ஷேத்திரபாலர் ஆலயத்தை இரவும், பகலும் அசுரர், ராக்ஷசர் முதலி யவர்களால் பீடை ஏற்படாவண்ணம் பாதுகாப்பர் என்பதாம்.

## நிவேதானக்கினி கிருஹித்தல்

வைரவர் ஆலயத்திலுள்ள தீபத்திலிருந்து இனியொருதீபம் ஏற்றி அவ் வக்னியைக் கொண்ட மடப்பள்ளி அடுப்பில் அகோரத்தால் வைத்து வக்கிரத்தால் எரியச் செய்து நைவேத்தியம் முதலியவற்றைச் சமைப்பிக் கச் செய்ய வேண்டியதாகும்.

## அதிகாலை பள்ளியறை பூஜை (திருவனந்தல்)

பள்ளியறையின் முன் மங்கல இசையினால் பள்ளி எழுந்தருளும் வண்ணம் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களைப் பாடி கதவைத் திறந்து

பொரி, பால், பழம், தாம்பூலம் நிவேதித்து ஆராதனை செய்தபின் இறைவியையும், இறைவனையும் அவரவர் மூலஸ்தானம் சேர்த்து மூலபிம்பத்தில் உற்பவ முத்திரையால் சம்யோஜிக்கப்படுவர். அதுமுதல் சிருஷ்டியாதி வேலை ஆரம்பமாகும். அது இங்கு உலக பாதுகாப்பிற் கான அருளைப் படைக்கும் வேலையாம்.

அவ்வேலைக்கு உதவியான ஸ்தானசுத்தி, பாத்யம், ஆர்க்கியம், ஆசமனியம், கற்பித்தல், திரவியங்களைச் சேகரித்தல் அதனை நால்வகை சுத்தியால் பரிசுத்தப்படுத்தல், பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், திருமஞ்சன முதலியதை சேகரித்தல் முதலியனவாம். அவற்றை முறைப்படி ஆசாரியர் உரிய மந்திரம், முத்திரை, பாவனைகளால் சுத்தி செய்து மந்திரசக்தியூட்ட வேண்டும்.

இவையாவும் அருட்பொலிவிற்கும், அருட்பெருக்கத்திற்கும் அவசியமான பொருள்களும் கிரியைகளுமாம்.

சில ஆலயங்களில் பள்ளியறையிலிருந்து சக்திபிம்பத்தை மூலாலயத்தில் சேர்ப்பதில்லை. இப்படி அனுஷ்டிப்பது சக்தியில் சிவன் ஒடுங்கும். இதுசாக்தேயம் வெளிப்படுகின்றன. இவ்விதியில் கூறியபடி மூலாலயத்தில் சேர்த்து பின் சுவாமி பள்ளியறை வந்தபின் சக்தி வருவது "சிவத்தில் சக்தி ஒடுங்கும்" என்ற சைவசித்தாந்தக் கருத்தை விளக்கும் என்பதாம். ஆகவே இரண்டு பேதங்களும் நம் பாரத தேசத்தில் ஆங்காங்குள்ள பரிபக்குவிகளின் நிலைக்கு ஏற்ப வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றனவாம்.

## உஷக்காலப் பூஜை

சூரியன் உதிக்கும் முன் இரண்டு நாழிகை முதல் உதயம் வரை ஒரு முகூர்த்தகாலத்தில் திருவனந்தல் பூஜை முடிந்த பின் விநாயகர், சுவாமி, அம்பாள் இந்த மூலமூர்த்திகளுக்கு பால் முதலானவைகளை அபிஷேகித்து அலங்கரித்து பாயசான்னாதிகளை நிவேதித்து விநாயகர், சுவாமி, அம்பாள், நடேசாதி, மகேசமூர்த்திகளுக்கும் ஆராதனைகளைச் செய்ய வேண்டும். பரிவார பூஜை கிடையாது. இந்த உஷக்கால பூஜை

யில் தைலாபிஷேகம் கூடாது. ஆதலால் பால் முதலிய திரவியங்க ளினால் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்பூஜையின் முடிவில் சூரிய உதயம் ஆக வேண்டும் என்பதாம்.

## திருமஞ்சனம்

உஷக்கால பூஜைக்குப் பிறகு நதி அல்லது தடாகம், கிணறு, இவற்றில் வசதிக்குத்தக்கவாறு ஏதாவது ஒன்றிலிலிருந்து சுவர்ணம், வெள்ளி, தாமிரம் முதலிய ஏதாவது ஒரு குடத்தில் மந்திரத்துடன் தீர்த்தம் பூரித்து மாவிலை, தேங்காய் கூர்ச்சம், வஸ்திரம், புஷ்பம், சந்தனம் முதலியவை களால் அலங்கரித்து சகல வாத்திய கோஷங்களுடன் யானையின் மீதோ, அல்லது பரிசாரகன் மீதோ ஏற்றிவைத்து வலமாக ஆலயத்தை அடைந்து வெளிநந்தி தேவருக்கு அபிஷேகஞ் செய்யவேண்டும். இத் தருணத்தில் இறைவன் இவ்விருஷபத்தின் மீது அமர்ந்திருப்பதாக கரு தியே அபிஷேகித்தலாகும். இவ்வாறு செய்வதால் உலகிற்கு சகல பாக் யமும் உண்டாகும் என்பதாம்.

## காலை சந்தி பூஜை ஆரம்பம்

சிவாகம விதிப்படி சூரியன் உதித்தபின் ஏழரை நாழிகைக்குள் செய் யப்படும் பூஜை காலசந்தி எனப்படும். இப்பூஜையில் முதலாவதாக இடம் பெறுவது சூரிய பூஜையா கும்.

### சிவசூரியபூஜை

ஆலயத்தின் முகப்பு சாவல் உள்பக்கம். தெற்குப்புறம் சூரியனும், வடக்குப் பக்கம் சந்திரனும், பரிவார தேவதைகளாக வீற்றிருப்பர். இவ்விருவர்களும் மூலமூர்த்திக்கு வலமிடக் கண்களாக அமைவர். ஆதலால் சூரிய உதயமாய் பிரசன்னமாயிருக்கும் வேளையான பகலில் காலை வேளையிலுள்ள இப்பூஜையில் சிவசூரியனை விதிப்படி பூஜித் தல் வேண்டும்.

சிவசூரிய பூஜையின் போது ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன்,

வியாழன், வெள்ளி, இராகு, கேது இவ்வொன்பதின்மர்களும், ஆவா ஹிக்கப்பட்டு பூஜிக்கப்படுவர். இவர்களுள் ஞாயிறு முதல் சனி வரை ஏழுகிரகங்களும், சூரிய மண்டலத்தின் ஏழு ஆதாரங்கள், அதன் அதி பர்களும் அதன் கணத்தலைவருமாவர். மற்ற இராகுவும். கேதுவும் சாயாக் கிரஹங்கள். இவ்விருவருக்கும் சூரிய மண்டலத்தில் ஸ்தூல உடம்பு இல்லை. என்பதாம்.

இந்த சிவசூரிய பூஜையின் போது ஆன்மார்த்தத்தில் தேஜஸ்சண்டர் இடம் பெறுவர். பரார்த்தலாத்தில் பரிவாரமாய் இருப்பதால் இவை கிடையா.

இப்பூஜையால் சிவசூரிய பகவானும், அவருடைய சகாக்களும் அதி காரம் பெற்ற சிவாசாரியர்களால் அழைத்து ஆராதிக்கப்படும் போது நவகிரகங்கள் சம்பந்தமான தேவகணங்கள் பிரசன்னமாகி ஆலயத்தில் ஏற்படுகின்ற கோள்களை நீக்கி இடையூறுகளைப் போக்கி அருட்ப ணியைப் புரிகின்றனர் என்பதாம்.

ஆலயங்களில் முற்காலத்தில் சூரியர், சந்திரர்கள் தாம் இடம்பெற்று விசேஷமாக ஆராதித்துப் போற்றி வந்தனர். பின்பு சனீஸ்வரர் இடம் பெற்றனர். இப்போது சிலநூற்றாண்டு காலமாக நவக்கிரகங்களும் இடம் பெற்று வழிபடப்படுகின்றன. இவைகள் பிற்காலத்திலேயே ஆலயத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டன என்பதேயாம். பிரதிஷ்டவரிசையி லும் ஸ்தான பேதங்கள் உள்ளவனாம். அதாவது துவஜ மண்டபத்திற்கு வெளியில் இந்த நவக்கிரஹங்களை ஸ்தாபிக்க கூறுகிறது.

## கணேச பூஜை

சிவசூரிய பூஜையின் பின் முதலாவதாக ஆலயத்திலுள்ள அனுஞ்ஞை விநாயகர் பூஜையை விதிப்படி பஞ்சாசன பஞ்சாவரணக்கிரமமாய் வழிபட்டு ஆர்ாதித்துப் பிரார்த்திக்க வேண்டும்.

கணபதியே சகல தேவ, பூத, கணங்களுக்கும் தலைவர். அவர் பூஜையிலும், அஷ்ட மூர்த்திகளும், கணநாதர்களும், ஆவரண தேவதை களும் அழைக்கப்பட்டு வழிபாடு இயற்றுதலால் பரார்த்த பூஜைக்குரி

யனவற்றை அருளால் நிரப்பி இடையூறின்றி இனிது முடிவுற உதவுவார்கள் என்பதாம்.

விநாயக வழிபாடுகள் நம் கிரியைகளில் அடிக்கடி நடைபெறும், அது அடிக்கடி சிதறிப்போகும், அடியார்கள், அர்ச்சகர்கள், மனம், மொழி, மெய்களை குட்டி அடக்கி ஒருமைப்படுத்துதற்கான ஒரு கிரியையாம்.

## துவார பூஜை

இந்த துவார பூஜை வழிபாட்டில் உள்ள தேவ தேவிகள் இவ்வாலயத்தை அருளோடு கூடிய புனித தன்மையை உண்டாக்குவதுடன் வழிபட வருகின்ற அடியார்களின் காம, குரோத, லோப, மோக, மத முதலியவைகளிலிருந்து பாதுகாத்து அருட்பெருக்கையும் உதவுவர் என்பதாம்.

துவாரபூஜை முடித்து திவ்விய முத்திரையினால் பார்த்தும், நாராச முத்திரையினாலே பூவைத்தெரித்தும், வலது குதிக் காலினாலே பூமியை மும்முறை தட்டியும் மூன்று வித இடை யூறுகளைப் போக்கி துவாரத்தின் இடதுபக்கமாக சத்யோஜாத மந்திரம் உச்சரித்து வலது காலை முன்வைத்து அர்த்தமண்டபத்தினுட் சென்று திரையில் ஸ்தானுவையும், நிரோதசக்தியையும் பூஜித்து இருதய மந்திரம் ஜபித்து பாசுபதாஸ்தர மந்திரத்தால் திரை மறைப்பை நீக்கி கர்ப்பகிருஹத்தினுட் செல்ல வேண்டும்.

## கர்ப்பாவரண பூஜை

முன்னர் செய்துள்ள புண்ணியாகம், வைரவர் பூஜை சிவசூரிய பூஜை விநாயகர் வழிபாடு இவைகள் கோயில் முழுவதையும் அருள்பிரகாசத்தை பொதுவாக உண்டுபண்ணும். கர்ப்பாவரண பூஜை அங்கங்கே சூக்ஷ்ம விசேஷ அருள் பிரகாசத்தை உண்டுபண்ணும் என்பதாம்.

இப்பூஜையில் ஆசாரியரானவர் பிரதானமூர்த்தியை வழிபடுவதற்கு நிர்விக்னமாய் திருவ்யசமிருத்தியுடன் நடைபெற விநாயகர், லக்ஷ்மி இவர்களை வழிபட்டு சப்தகுருவின் அருளைப் பெறுகின்றார்.

## பஞ்ச சுத்தி

ஆச்சாரியர் மூர்த்தியின் பக்கத்தில் கூர்மாசனத்தின் மேல் அமர்ந்து பூதசுத்தி, அந்தர்யஜனம், ஸ்தானசுத்தி, திரவ்யசுத்தி, ஆத்ம பூஜா மந்திர சுத்தி முதலியவைகளைச் செய்து, வர்த்தனீ கலசத்தில் பூஜித்து இந்த தீர்த்தத்தை அபிஷேக முதலிய தீர்த்தத்தில் விட வேண்டும். இதனால் ஆச்சாரியர் எந்த மூர்த்தியை வழிபட அமர்ந்தனரோ அந்த சோஹம் பாவனை அடைகிறார் என்பதும், கலச பூஜா ஜலத்தை மற்ற தீர்த்தத் துடன் கலப்பதால் அவை புனிதமான அமிருதத் தன்மை அடைகின் றனவாம். இந்த சுத்திகள் ஸ்நபன பூஜையின் போது செய்திருப்பின் இவ்விடத்தில் வேண்டாம்.

## பிம்ப சுத்தி

பிம்பத்தை அர்க்கிய தீர்த்தத்தால் மந்திரத்துடன் தெளித்து நிருமா லியம், பரிவட்டம் முதலியவைகளைக் களைந்து சண்டேசரின் பொருட்டு சேமித்து வைத்து அஸ்திரமந்திரத்தால் மூர்த்தி பிம்பத்தையும் பாசுப தாஸ்திர மந்திரத்தால் பீடத்தையும் சுத்த ஜலத்தால் சுத்தி செய்தல். இது சூக்ஷ்ம சுத்தியாகும்.

இவை சகலவிக்னங்களும் தீர்த்து, மந்திரங்கள் பிரகாசித்து பயனைக் கொடுக்கும் என்பதாம்.

## ஆசன பூஜை

ஆதாரசக்தி முதல், ஸ்திராசனம் வரை ஆறு ஆசனங்களிலும் பல தேவதைகள், பூதகணங்கள், மண்டலங்கள், மண்டலாதிபதிகள், அவர் களின் சக்திகள், சித்சக்திகள் யாவரையும் இந்த ஆசன உறுப்புகளில் வழிபடப்படுகின்றன. இவர்கள் இங்கு சான்னித்தியமாகவிருந்து இதன் மேலே ஆவாஹிக்கப்படுகின்ற ஜோதிமயமான மூர்த்தியை வழிபாடு இயற்ற அருளைத் தாங்கி நிற்கின்றனராம்.

## மூர்த்தி ஆவாஹனம்

ஆகமவிதிப்படி செய்யும் பூஜைகளில் மந்திரம், முத்திரை, பாவனை என்ற மூன்று கிரியைகளை இணைத்துச் செயல்படுவது இவற்றுள்

ஏதாவதொன்றை நீக்கி மற்றவைகளைச் செய்தாலுமோ, அல்லது இணக்கமற்ற முத்திரை பாவனைகளைச் செய்தாலுமோ இங்கு தேவ சம்பந்தத்திற்குப் பதில் அசுர சம்பந்தமே விளையுமென்று சிவாகமம் கட்டளை இடுகின்றது.

இந்த ஆவாஹனத்தின் போது மூர்த்தியின் மூலமந்திரம் ஆசாரியரால் ஓதப்படும். அப்போது அந்த மூர்த்தியானவர் தேஜோரூபமாயும், தண்டாகாரமாயும் பிரியாத அவயங்களோடு கூடினவராயும், அருக தையுடைய அந்த ஆசாரியாபிஷேகம் பெற்ற ஆதிசைவர்களின் அழைப்பிற்கிணங்கித் தோன்றுவராம். பின்னர் மந்திரம், முத்திரைக ளால் வித்யாதேஹம் மற்றும் உறுப்புகளும் நியாச முறையில் வகுக்கப் பட வேண்டுமாம். அவரது அந்தந்த மூர்த்திக்குரிய வடிவம் நிறம், ஆடை, ஆபரணங்கள், ஆயுதங்கள், அவயங்கள் முதலியன இனிது பாவனை செய்யப்படும்.

இறைவனை அகத்தே தியானித்து புறத்தே பிம்பத்தில் தாபித்தலே ஆவாஹனம். அவை எங்கும் வியாபகமாயுள்ள பகவானை இந்த பிம் பத்தில் விளக்கி தோன்றும்படி செய்வதே ஆவாஹனம்.

சுயம்பு முதலிய லிங்கங்களில் பகவான் சதாசர்வகாலமும் சான்னித் தியராய் இருப்பதால் பூஜாகிரியைகளில் ஆவாஹனத்தின் போது மூல மந்திரத்தால் பூஜிப்பதேயாம். இது அபிமுக ஆவாஹனமெனப்படும்.

ஜீவன் யாசபுரஸ்சரமாக செய்யப்படுகின்றது சித்பிரகாச ஆவாஹ னமென்றும், பூஜா காலங்களில் செய்யப்படுகின்றது சம்முக ஆவாஹ னமெனவும் இருவகை பேதம் கூறுகிறது.

சைவ சாஸ்திரப்படி பூஜிக்கும் பிம்ப கும்பங்களில் இந்த ஆவாஹன விதி தெரிந்து செய்தல் வேண்டும். தத்துவாதீதரான இறைவனை தத் துவத்தினுட்பட்ட பிராணன் என்ற ஒரு வாயுவை மட்டிலும் பிரதான மாகக் கொண்ட பிராணப்பிரதிஷ்டை செய்தல் கூடாவாம். ஸ்மார்த்த சர்மமுடையவர்கள். தத்துவத்தினுட்பட்ட இருபத்தினான்கு தத்துவ வியாபகமாக உள்ள மூர்த்தியையே வழிபடுவதால் அங்கு பிராணபிர

திஷ்டை கூறப்பட்டன. அதனை சைவர்கள் கைக்கொள்வது முற்றிலும் தவறாகும்.

சம்யோஜனம், சாபேக்ஷ விசர்ஜனம், விஸர்ஜனம் என மூன்றுவகை அதாவது

1. அக்னியிலிருந்து கும்பத்திற்கும், கும்பத்திலிருந்து பிம்பத்திற்கும், பிம்பத்திலிருந்து இருதயத்திலும் ஒடுக்கிக் கொள்வது சம்யோஜனம் எனப்படும்.

2. விசர்ஜனம் செய்தாலும் கும்பஜலம் அபிஷேகம் செய்யப்படும் வரை கும்பத்தில் இருக்க வேண்டுமென்று பிரார்த்தனையுடன் கூடியது சாபேக்ஷாவிசர்ஜனம்.

3. ஸ்மார்த்கர்மாக்களில் யதாஸ்தானம் செய்வது விஸர்ஜனம் என்பதாம்.

அப்படி ஆவகித்த பின்னர் அங்கிருப்பது பிம்பம் என்றும் பத்தியை நீக்கி, மூர்த்தி பிரசன்னமாயிருப்பதை அர்ச்சகரும், அடியார்களும் அன்பானவர்களும் உணரவேண்டும் என்பது ஆகமவிதி.

## தூபதீப அர்க்கியம்

இவை அர்ச்சகருடைய அழைப்பிற்கிணங்கிப் பிரசன்ன மாகியுள்ள மூர்த்திக்கு அவர் செய்யும் உபசாரங்களாகும். ஆயினும் அவை வேறு சூக்ஷ்மபலன்களையும் உடையன. தூபம் கந்தவர்வ கணத்தையும் தீபம் அக்னி கணத்தையும் சார்ந்து வழிபடுபவர்களுக்கு ஆணவமாகிய அறியாமையை கிரியாசக்தி கொண்டு நீக்கி ஞான அறிவையும் கொடுக்கும் என்பதாம்.

அர்க்கியங்களாவன பாத்தியம், ஆசமனம், அர்க்கியம் என மூன்றாகும் அவற்றுள் பாத்தியம் பாதம் கழுவுதல். அது அர்க்கிபாத்திரத்திலுள்ள ஜலத்தில் விலாமிச்சவேர். குங்குமப்பூ வெண்கடுகு, சந்தணம், அறுகு சேர்த்து பூஜித்து அங்க மந்திரம் ஜெபித்து அந்த அர்க்கிய ஜலத்தை நம; என்னும் இறுதியாகவுள்ள மூல மந்திரத்தால் மூர்த்தி

யின் பாதத்தில் தெளிப்பது.

ஆசமனம் பருகக்கொடுத்தல் அது, அர்க்கிய பாத்திரத்திலுள்ள ஜலத்தில் விலாமிச்சை வேர், ஜாதிக்காய், பச்சைக் கற்பூரம், சிற்றேலம், கிராம்பு, பால் இவைகளைச் சேர்த்து பூஜித்து பிரம்மமந்திரம் ஜெபித்து ஸ்வதா என்னும் பதம் இறுதியாகவுள்ள மூலமந்திரம் உச்சரித்து மூர்த்தியின் கையில் கொடுப்பதாம்.

அர்க்கியம் இந்த ஜலத்தில் பால், தெர்ப்பைநுனி, அரிசி, புஷ்பம், எள்ளு, எவைநெல், வெண்கடுகு சேர்த்து பூஜித்து மூல, பஞ்சபிரும்மா மந்திரம் ஜெபித்து, ஸ்வாஹா என்னும் பதம் இறுதியாகவுடைய மூலமந்திரத்துடன் மூர்த்தியின் சிரசில் தெளிப்பது.

சாமாநியார்க்கியம் விசேஷார்க்கியம், நிரோத்தார்க்கியம், பராங்முகார்கியம் என்ற பேதங்களோடு கூடியது.

ஒவ்வொரு மூர்த்தியின் பூஜையின் போது மூன்று நான்கு தடவைகள் கொடுக்கப்படும் இந்த அர்க்கியங்கள்

**நம** - நமஸ்கரிக்கிறேன்.

**ஸ்வதா** - என்னை அர்ப்பணிக்கிறேன்.

**ஸ்வாஹா** - என்னை வந்து ஆண்டருளும்.

என்று ஓதும்போது அவை பூஜை செய்யும் பூஜகருடைய மனோ வாக்கு காயங்கள் புறத்துச் செல்லாது தடுத்து மூர்த்தியிடம் திரும்பி ஒற்றுமைப்படுத்துவதற்கு உதவுவதோடு மூர்த்தியினுடைய அருளை வலிந்து பெறுதற்கு துணையாயிருத்தல் கூடும்.

விசேஷாக்கியம் மூலஸ்தான பிரதான மூர்த்திக்கும்,சாமானியாக்கியம் பரிவார தேவர்களுக்கும், உபதேசிக்கப்படுவனவாகும். விசோர்க்கியம் ஆவாஹனம், அபிசேகம் ஜெபசமர்ப்பணம் முதலான காலங்களில் கொடுக்கப்படும்.

**நிரோதார்க்கியம்** - சுவாமி, நீர் பூஜை செய்யப்படுகின்ற பிம்ப கும் பங்களில் பூஜைமுடிவுறும் வரை பிரசன்னமாக விருக்கவேண்டு மென கொடுத்தலாம்.

**பாராங்முகார்க்கியம்** - பூஜை முடிவிற் கொடுத்து சம்யோஜனம் செய் தற்காம், இவை யாவும் மிருக முத்திரை கொண் டு கொடுக்க வேண்டும்.

**சங்கம்** - வலம்புரிவிசேஷம் அல்லது இடம்புரி பூஜைக்கு ஆகும், இதில் விசேஷார்க்கியம் போல் பூஜித்து ஜெபித்து சுளு கோதகம் (குடங்கைநீர்) சமர்ப்பித்தல், தெளித்தல், அபிஷேகித்தல் முதலானவை கட்கு உபயோகிக்கப்படும். சங்க ஜலத்திற்குப் பதில் விசேஷார்க்கிய ஜலத்தையும் உபயோகிக்கலாம். ஸ்நபன கலசாபிஷேகம் செய்யலாம் இவை ஆகம பேதம் என்பதாம்.

## மணியில் உள்ள தேவதைகள்

மணியில் வாசுகியும், நாக்கில் சரஸ்வதியும், தண்டத்தின் நுனியில் ருத்திரனும், மத்தியில் விஷ்ணுவும், அடியில் பிரம்மாவும் தேவதைக ளாகும்.

## மணியின் சப்தத்திற்குப் பலன்

அசுரர்கள், ராக்ஷஸர்கள், பிசாச்சர்கள், பிரம்ம ராக்ஷஸர்கள் முதலி யவர்கள் மணியின் ஓசையை கேட்ட மாத்திரத்தில் வெகு தூரம் அகலு வார்களாம்.

## பெரிய மணி அடிக்கும் காலங்கள்

அபிஷேகம், அதன் முடிவு, அர்ச்சனையின் முடிவு நெய்வேத்தியத் தின் ஆரம்பம், உற்சவத்தின் ஆரம்பம், அதன் முடிவு, நர்த்தனத்தின் முடிவு, இக்காலங்களில் பெரிய மணி அடிக்கும்.

## கைமணி அடிக்கும் காலம்

கர்ஷஸம் முதலான கிரியைகளின் ஆரம்பம், விநாயகர் பூஜை, புண்யாஹவாசனம் ஆரம்பகாலத்திலும், தூப தீப காலத்திலும் பலி காலத்திலும் இவை முடியும் வரையில் மணி அடிக்க வேண்டும்.

மணிசப்தம் இல்லாவிடில் பலன் கிடையாது.

## மணிநாதத்தின் கிரமம்

ஒரு அடி மோக்ஷம், இரண்டு அடி போகம், மூன்று அடி சித்தியின் பொருட்டும் புண்யாஹம் தூபம், தீபம், நெய்வேத்யம் பலி இவைகளில் இரண்டு நாதமும், தீபாராதனை செய்யும் போது ஒரு நாதமும், மற்ற பரிவாரம் முதலிய இதர தேவதை களுக்கு மூன்று நாதமும் ஆகும்.

## அபிஷேக கிரமம்

சிவலிங்கத்தின் சிரசுக்கு மேல் நான்கு அங்குலம் உயரத்திலிருந்து பசுவின் கொம்பு நுனிப் பிரமாண தாரையாய் ஜலத்தை அபிஷேகித்தல் வேண்டும்.

### அபிஷேக ஜலத்தில் இடும் திரவ்யங்கள்

| | |
|---|---|
| 1. ஏலம் | 7. தக்கோலம் |
| 2. கிராம்பு | 8. கச்சோலம் |
| 3. ஜாதிக்காய் | 9. வெட்டிவேர், |
| 4. பச்சைகற்பூரம் | 10. விளாமிச்சிவேர் |
| 5. சந்தனம் | 11. செண்பக மொட்டு |
| 6. கோரோசனை | 12. ஸ்வர்ணம் (தங்கம்) |

இவைகளை அபிகே ஜலத்தில் போட வேண்டும்.

### அபிஷேக திரவ்யம்

| | |
|---|---|
| 1. சுகந்த தைலம் | 2. மாபொடி |
| 3. நெல்லி பொடி | 4. மஞ்சள் பொடி |
| 5. திரவ்ய பொடி | 6. பஞ்சாமிருதம் |
| 7. பால் | 8. தயிர் |
| 9. நெய் | 10. தேன் |
| 11. சர்க்கரை (வெல்லம்) | 12. மா, பலா, வாழைப்பழம் |

13. கரும்புசாறு, இலுமிச்சப்பழம், நார்த்தம்பழம், தமரத் தம்பழம், கொழிஞ்சிப்பழம், மாதுளம்பழச்சாறு

14. இளநீர்
15. அன்னம்
16. விபூதி
17. சந்தனம்
18. வில்வோதகம்
19. தாரை ஸஹஸ்ரதாரை
20. கொம்பு ஜலம்
21. சங்கு ஜலம்
22. ஸ்நபனம்

கும்பாபிஷேகம் ஸ்படிக லிங்கத்திற்கு தைலம் ஆகாது.

## அபிஷேக திரவ்யத்தின் அளவு

| | |
|---|---|
| தைலம் நல்லெண்ணை 1 படி | வாழைப்பழம் 25 |
| பலாப்பழம் 1 | எலுமிச்சம் பழம் 25 |
| மாம்பழம் 15 | மாதுளம் பழம் 10 |
| நாரத்தம்பழம் 10 | இளநீர் 12 |
| சர்க்கரை 3 பலம் | நெய் அரை படி |
| தேன்கால்படி | பஞ்சகவ்யம்1 மரக்கால் |
| பால் 6 படி | தயிர் 12 படி |
| மஞ்சள் பொடி 1 பலம் | மாபொடி 1 பலம் |
| நெல்லிப்பருப்புபொடி3பலம் | உளுந்து பயறுபொடி2பலம் |
| கரும்புச்சாறு 3 படி | பன்னீர் முக்கால் படி |
| ஜலத்திரவ்யம் 2 பலம் | அன்னாபிஷேகம்1 மரக்கால் |
| நெய்வேத்யம் 1 மரக்கால் | வாசனைதீர்த்தம் 1 மரக்கால் |

பஞ்சாமிர்தம் 1 மரக்கால்

வில்வபத்ரோதயம் புஷ்போதகம் 1 மரக்கால்

சுவர்ணோதயம் 1 மரக்கால்

குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கஸ்தூரி கோரோஜனை, பன்னீர்

இவைகள் கலந்த சந்தனம் 4 பலம்

வஸ்திரம் 8 முழம்

நெய்வேத்ய அரிசி 4 மரக்கால்

இவ்வாறு 1 படி தைலத்திற்கு மற்ற திரவ்யங்களை கணக்கிட்டு செய்ய வேண்டும்.

### அபிஷேக திரவ்யம் அளவின் முறை

ஆள்காட்டி விரலின் இரண்டு ரேகை வரை நனைந்து சொட்ட விட்ட சொட்டு பிந்து என்பதாகும். அதன் 6 விரல் கொண்டது ஒருபாதி கர்ஷம். அதில் இரண்டு கொண்டது ஒரு கர்ஷம் 2 கர்ஷம் ஒரு முஷ்டி, 2 முஷ்டி ஒரு பிரஸ்ருதி, அதில் வீசம்படி, பிரஸ்ரத்தின் 2 தாரணை முக்கால் படி 2 குடுபம் கால் படி குடுபம் 4 பிரஸ்தாரம் 1 படி இதுவே 6 பழம் படி கொண்டது மரக்கால் இதில் சிவம் அதில் 2 திரோணம் அதில் 2 காசி அதில் 2 பாரம் இதற்கு தகுந்தால் அறிந்து கொள்ளவும். அதாவது 8 மரக்கால் 1 பாரம் என்பது தெளிக. 1 மரக்கால் என்பது 4 படி 1 பலம் என்பது 60 கிராம் என்று அறியவும்.

### உற்சவ மூர்த்தியின் அபிஷேகம்

உற்சவ மூர்த்திக்கு பிரதி தினமும் அபிஷேகம் செய்தல் கூடாது. பருவ காலங்களில் விதிமுறைப்படி அபிஷேகம் செய்தல் வேண்டும் தைலத்தை பாவனையாகவே அபிஷேகம் செய்ய வேண்டும். இளநீர் அபிஷேகம் செய்த பின்னர் புளியைக் கரைத்து அபிஷேகித்து தர்ப் பையை அஹுத்து அந்த பஸ்மத்தை கொண்டு நன்றாக சுத்தி செய்து பின்பு அன்னாபிஷே கம், பின் கிரமபடி அபிஷேகம் செய்தல் வேண்டும்.

### அபிஷேகம் முதலியவற்றிற்கு நாழிகை

அபிசேகம் 2 நாழிகை, அர்ச்சனை 1 நாழிகை, நைய்வேத்யம் அரை நாழிகை, பலி போட அரை நாழிகை, அக்னிகாரியம் அரை நாழிகை, நித்யோற்சவம் 2 நாழிகை, நர்த்தனம் ஒரு நாழிகை, ஒவ்வொரு சந்தி

களிலும் செய்யவும்.

### அபிஷேக காலத்தில் திரையிடல் வேண்டும்

அபிஷேக காலத்தில் திரையிடல் வேண்டும். திரையிடாமல் அபிஷேகம் செய்தால் ராஜாஷ்டிரங்கருக்கு தீங்கு ஏற்படும்.

விபூதி, சந்தனம் அபிஷேகம் முடிந்தவுடன் திரையை விலக்கிவிட்டு பக்த ஜனங்கள் தரிசிக்க வேண்டும் மற்ற திரவியங்கள் அபிஷேகம் சமயங்களில் திரையை நீக்கி தரிசித்தல் கூடாது. அக்ஞானத்தால் தரிசித்தால் ஆயுள் முதலானவைகள் நாசமேற்படும் அபிஷேகம் சமயத்தில் வஸ்திரம் தரித்து அபிஷேகம் செய்ய வேண்டும்.

சுவாமிக்கு அபிஷேகம் சுத்த ஜலத்தினால் நன்றாக அபிஷேகம் செய்தல் நல்ல பலன்.

### மாதத்தின் சிறப்பு அபிஷேக பூஜை பலன்

1. சித்திரை - மரிக்கொழுந்து
2. வைகாசி - சந்தனம்
3. ஆனி - முப்பழம்
4. ஆடி - திரட்டி பால்
5. ஆவணி - எள் சர்க்கரை
6. புரட்டாதி - பணியாரம்
7. ஐப்பசி - சம்பான்னம்
8. கார்த்திகை - தீபவரிசை
9. மார்கழி - நெய் அபிஷேகம்
10. தை - தேன் அபிஷேகம்
11. மாசி - நெய் கலபம்
12. பங்குனி - வடிகட்டிய பசும் தயிர்.

## சுவாமி தரிசன பலன்

திரையிட்டு இருக்கும் போது சுவாமி தரிசனம் பிரதஹனம் செய்தல் கூடாது. அக்ஞானத்தால் செய்தால் ஆயுள், தனம், புத்திரர் இவைகள் குறைந்துவிடும்.

காலையில் சிவதரிசனம் செய்தால் முன் இரவில் செய்த பாவம் போகும். காலசந்தியிலும், மத்தியானத்திலும், சாயங்காலத்திலும், சிவதரிசனம்

செய்தால் முறையே ஒரு யானையும் நூறு கோடி பசுக்களையும், ஐந்து கோடி குதிரைகளையும் தானம் செய்த பலன் உண்டாகும்.

## அபிஷேகம்

அபிஷேக திரவ்வியங்கள் பலவாகும். அவை பிம்பத்தின் அழுக்குகளைப் போக்குவன அல்ல. பிம்பத்தில் கசடுகளை உண்டு பண்ணவே செய்யும். ஆயினும் அருட்சக்திகள் ஒவ்வொரு பொருட்களிலும் சில விசேஷ சக்திகள் வேகமாகத் தோயும். அவை மூலம் பிம்பத்திற்கும் அதன் யந்திரத்திற்கும் அச்சக்தியானது பதியும், அதனாலேயே பல வகை திரவ்வியங்கள் அபிஷேகத்திற்கு விதிக்கப்பட்டன.

ஆனால் அதற்குரிய அஸ்டசம்ஸ்காரங்கள் செய்யாமலும், அவற்றில் மந்திரஉரு ஏற்றாமலும், அபிஷேகத்தின் போது ஓத வேண்டிய மந்திரங்களை ஓதாமலும் வெறும் கடன் கழிப்பது பலன் இல்லாமல் போகும்.

அதனால் **ஆலயங்களில் அபிஷேகங்கள் நடத்துவிக்கும் அன்பர்களும், அதிகாரிகளும் நல்ல பலன் உண்டாக வேண்டி முறைப்படி செய்ய அர்ச்சகரை வற்புறுத்த வேண்டும். அத்துடன் அவருக்கு உதவியாக தக்கவர்களை நியமிக்கவும் வேண்டும். தக்க ஊதியமும் அளிக்க வேண்டும்.**

ஆகமவிதியின்படி நடைபெறுமாயின் பிம்பத்திலும், அதன் யந்திரத்திலும் சேமித்து வைக்கப்பட்ட தெய்வீக சக்தி, வசீகர அருள்பிரகாசத்தைக் கொடுக்கும்.

அடியார்களுக்கு அனுக்கிரஹம் செய்வது பிம்பசக்தியும், அதன் அடியிலுள்ள யந்திரசக்தியுமாகும். ஆதலால் அபிஷேக திரவ்யங்களை குறையாமல் விதிப்படி செய்தால் மிகுந்த நன்மை தரும். வெறும் ஆடம்பரத்தால் நன்மை பயக்காது என்பதாம்.

அபிஷேகக்காலத்தில் ஆச்சாரியர் வியோமவியாபிபத மந்திரம், சதருத்திரம், சமகம், புருஷசூக்தம், ருத்ரசூக்தம், பஞ்சசாந்தி, கோஷசாந்தி முதலியனவும், தமிழ்வேதமும் ஓதல் வேண்டும். அல்லது ஆச்சாரியருக்கு உதவியாக பதமந்திரம் ஜெபம் செய்யத்தக்க ஆதிசைவர்களையும்,

வேதமந்திரம் செய்யதக்க தீக்ஷைபெற்ற பிராமணர்களையும், அப்படி கிடைக்கவில்லையாயின், வேதம் கற்ற சாதாரண பிராமணர்களையும், தமிழ் வேதம் பண்ணோடு ஓதுவதற்கு தகுதி வாய்ந்த ஓதுவார்மூர்த்தி களையும் நியமித்து பாராயணஞ் செய்ய வேண்டும்.

இந்த அபிஷேகநிர்மாலிய திரவ்வியங்களில் விபூதி, சந்தனம், தீர்த் தமும் பக்தர்கள் பிரசாதமாக பெறலாம். மற்றவைகளை ஆச்சாரியருக் குரிய பாகமாகக் கருதி அவருக்கே அடைவிக்க வேண்டும்.

## திருவொற்றாடை

அபிஷேகமானவுடன் நிவேதனம் செய்து நீராஞ்சனம் காண்பித்து பின் பிம்பத்தை நன்றாக தூய்மையான வஸ்திரங் கொண்டு துடைத் தல் வேண்டும்.

## அலங்காரங்கள்

ஆடை ஆபரணங்களாலும், புஷ்பங்களாலும் விக்ரஹத்தை அலங்க ரித்தல் இறைவனுக்குச் செய்யும் உபசாரத்துடன் அடியார்களின் மன தைக்கவர்ந்து அவர்களுக்கு பக்தியை ஊட்டுவதுமாகும்.

இரண்டாவதாக ஆலயங்களில் ஒவ்வொரு மூர்த்திக்கும் விதிக்கப் பட்ட பூக்களும், விலக்கப்பட்ட பூக்களும் உள்ளன. அதனால் இந்த விதிவிலக்குகளிலிருந்து அந்தந்த மூர்த்தியின் அருட்பிரகாசத்தைக் கொடுக்க சில பூக்கள் உதவியாகவும், வேறு சில பூக்கள் இடையூ றாகவும் இருக்குமென்று தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. புஷ் பத்தின் பார்வை விசேஷத்தை விட சூக்ஷ்ம வசீகரம் கூடுதலான பல னைக் கொடுக்கவல்லதாம்.

ஆடைகள், பட்டுகள் பிம்பத்தில் தனித்தனி கலையின் சக்திகளை சேமிப்பதற்கு உதவுவனவாம், ஆதலினாலே முற்பகலில் மஞ்சள் வஸ் திரமும், நடுப்பகலில் சிவப்பு வஸ்திரமும், சாயங்காலத்தில் அனேக விசித்திர வஸ்திரங்களும், அர்த்தஜாமத்தில் வெள்ளை வஸ்திரமும் அணிவிக்க வேண்டுமென்று ஒவ்வொரு காலபூஜைக்கும் ஒவ்வொரு நிற ஆடைகளைச் சாத்தும்படி சிவாகமங்கள் கூறுகிறது.

ஆபரணங்களில் பொன்னும், நவரத்தினங்களும் அருட் சக்தியின் கலையைப் பெருக்குவதற்கு உதவுவனவாம்.

ஆதலினாலேதான். நம் ஆலயங்களில் மிகக் குறைந்த வருவாய் உள்ள இடத்திலுங்கூட செயற்கைப் பூக்களை கொள்ளாமல் இயற்கைப் பூக்களையும் சிறிய பொட்டாவது பொன்னாலும் நவரத்தினங்களில் ஒரு சிகப்பு கற்களாவது பிம்பங்களுக்கு அணிவித்து அதன் அருட்பெருக்கை அடைந்து வருகிறார்கள்.

பூஜைக்குரிய பூவினங்களும் பொதுவும் சிறப்பும் என பேதங்கள் உள்ளவனவாம்.

## தேவர்களுக்கு ஆகாத புஷ்பங்கள்

பிரம்மாவிற்கு தும்பையும், துர்க்கைக்கு அறுகும், சூரியனுக்கு வில்வமும் தகாமும், விநாயகருக்குத் துளசியும், விஷ்ணுவிற்கு அக்ஷதை, வெள்ளெருக்கு ஊமத்தை, நந்தியாவட்டையும் உமாதேவிக்கு அறுகு வெள்ளெருக்கு, மந்தார நெல்லியும், சிவபெருமானுக்கு செம்பருத்தம்பூ, தாழம்பூ, குந்தம், சேகரம் குடஜம், ஜபாபுஷ்பம் இவைகளும் வைரவருக்கு நந்தியாவட்டையும் ஆகாதாம்.

## நிருமாலிய தோஷமற்ற பத்திர புஷ்பம்

வில்வம், துளசி, கருஊமத்தை, நீலோற்பலம் இவைகளை திங்கள், வெள்ளி மலர்ககளைப் போல கழுவி மீண்டும் சாத்தலாம். இதனால் இவைகட்கு நிருமாலிய தோஷம் கிடையாதென்பதாம். பத்திர புஷ்பங்களை கவிழ்த்துச் சாத்துதல் கூடாது. புஷ்பாஞ்சலிக்கு அந்த தோஷமில்லை. ஒருபோது புஷ்பத்தை கிள்ளி சாத்துதல் கூடாது. பத்திரத்தைக் கிள்ளிச் சாத்தலாம், வில்வத்தையும் துளசியையும் தளமாகவே பூஜிக்க வேண்டும். மற்றவைகளை புஷ்பவிதியிற்கண்டு கொள்க.

## ஆவரண பூஜைகள்

ஒவ்வொரு மூர்த்திக்கும் வெவ்வேறு ஆவ்ரண தேவர்கள் உள்ளனர், முதலாவரணம் பிரும்மாங்களாகும். இரண்டாம் ஆவரணம் அஷ்டவித்யேஸ்வரர்களாகும். மூன்றாம் ஆவரணம் அஷ்டகணநாதர்களாகும்.

நான்காம் ஆவரணம் இந்திராதிலோக பாலர்கள். ஐந்தாமாவரணம் லோக பாலகர்களின் ஆயதங்கள், நான்காம் ஐந்தாம் ஆவரணங்கள் எல்லாத் தேவர்களுக்கும் பொதுவாகும்.

சிவபரமல்லாத அன்னிய சக்திகளுக்கு ஒன்பது ஆவரண தேவதை களும், சிவபரமான நடராஜ பெருமானுக்கு ஏழு ஆவரண தேவதை களும், விசேஷ விதியாகவுள்ளன.

## நைவேத்தியம்

உபசாரங்கள் யாவும் அருளை விளைவிக்கும் எனவே, நைவேத்தியம் இறைவனுக்கு பசிஆற்றுதற்கு அல்ல. அது அடியார்களுக்கு அருள் வழங்குவதற்கு என்பதாம்.

ஆராதனையின் சக்திகள் அடியார்களுடைய சூஷ்ம உடம்புகளைச் சார்ந்து அதன்மூலமே ஒரு சிறிது ஸ்தூல உடம்பையும் சார்வன என்ப தாம்.

அருட்சக்திகள் உடம்பில் நிலைத்திருப்பதற்கும், நமது ஸ்தூல உடம் புகளை பண்படுத்துவதற்காகவே இந்த நைவேத்தியம் செய்யப்படுகின் றது.

ஆலயங்களில் நைவேத்தியங்கள் ஆசாரக்குறைவாகவும், அலக்ஷியத் தோடும் தயாரித்தல் கூடாது. தீக்ஷைபெற்றவர்களே விதிப்படி தயா ரித்து அதனையே நிவேதித்தல் வேண்டும்.

தீக்ஷையுடன் விபூதி, உருத்ராக்ஷம் அணிந்து இறைவனையே சரண மாக எவர் எண்ணுகிறார்களோ அவர்களே அந்த நிவேதனத்தை சமைப் பித்தல் வேண்டும்.

சுத்தான்னம், பாயசான்னம், எள்ளன்னம், பயற்றன்னம், சருக்கரை அன்னம் இவை பஞ்ச அவிசாகும். இவையே நிவேதனத்திற்கு முக்கிய மாகும். வேறு சில சித்திரான்னம் தயிர் அன்னம், முதலியவைகளையும் உபதம்சமாகிய நெய், கறி, தயிர் முதலியனவும், பக்ஷணங்களும், தேங்காய், பழவர்க்கம் முதலியனவும் விசேஷமாகும்.

நிவேதனத்தை ஆசாரியர் நிரீக்ஷனாதி சுத்தி செய்து அமிருதத்தன்மை உண்டாக்கி அந்தந்த மூர்த்தி மூலத்தால் நிவேதித்தல் வேண்டும். இதில்லா மல் பிரணாதி பஞ்ச வாயு மந்திரங்களால் நிவேதிப்பின் அதனில் ஆவிர்ப் பவித்துள்ள ஆன்மா பூதங்கள், பாதாளவாசிகள், பிதுருக்கள், தேவர்கள் ஆகிய இவர்களே அதை உட்கொண்டதாகும். இறைவனுக்கு அவை உரியனவாக இல்லாமல்போகும் என்பதாம்.

சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், தாம்பூலம் இவை களை மூல மந்திரத்தினாலேயே கொடுக்க வேண்டும்..

தனித்தனி பாத்திரம் இல்லையாயின் எல்லாப் பரிவார தேவதை களுக்கும் ஒரே பாத்திரத்தில் வைத்து தனித்தனி நிவேதனத்தைச் செய்ய வேண்டுமாம்.

நிவேதிப்பதற்கென வகுக்கப்பட்ட அன்ன முதலியதை எட்டுப்பங்கா கப் பிரித்து இரு பங்கு மூல மூர்த்திக்கும், ஒன்று சக்திக்கும், விநாயகர், ஸ்கந்தர் முதலிய பரிவார தேவர்களுக்கும் பலியிடுவதற்கு ஒருபங்கும், ஆச்சாரியனுக்கு ஒருபங்கும், பாத்திரசேமமாக ஒருபங்கும் உபயோ கிக்க வேண்டும். பாத்திரசேமமாகவிருப்பது பரிசாரகர் முதலியவர்க ளுக்கு உரியதாகும்.

நைவேத்தியம், நிவேதிதம், சண்டதிருவ்யம், நிர்மாலியம் என நான்கு பேதமாகும்.

மயிர், புழு, மணல், உமி இவை இல்லாமலும் குழையாததாயும், நறுக்கரிசி இல்லாததாயும், அதிக சூடு, அதிக சீதம் இல்லாததாயுமுள்ள நல்லசுவையோடு கூடியதையே நிவேதிக்க வேண்டும்.

தீக்ஷையுடன் விபூதி உருத்ராக்ஷதாரணமும், கடவுள் பக்தியும், ஆச்சார அனுஷ்டான வழிபாடுகள் உள்ளவர்களே, அடிமை என்ற முறையில் நிர்மாலியங்களை அனுபவிக்கலாம். ஏனையோர் அனுப வித்தல் கெடுதியே சம்பவிக்கும் என்பதாம்.

தாம்பூலம், விபூதி, சந்தனம், தலம், புஷ்பம், அபூபம் முதலிய

பக்ஷணங்கள் தேங்காய்ப்பழம் முதலிய சாப்பிடுதற்குரியவைகள். நிருமா தலியத்தன்மை இல்லாமையாலும், ஆன்மரக்ஷைக்காகவும் யாவரும் பிரசாதமாக அனுபவிக்கலாம்.

நமது ஆலயங்களில் நிவேதிக்கப்படும் பொருள்கள் விதிப்படி நிவே திக்கப்படின் ஏதோ மாறுதல்களை அடைகின்றன. அவற்றை பயபக் தியுடன் உட்கொள்ளுவதால் மக்கள் ஸ்தூல உடம்பிலும், சூக்ஷம உடம்புகளிலும் நற்பலன் பெறுவார்களாம்.

மடப்பள்ளியில் ஆக்குவனவெல்லாம் நைவேத்யமாகாது. இறைவன் சன்னதியில் வைத்து நிவேதிக்கப்படுவதற்கே நிருமாலியம் என்றும், அது நிருமலமுடையதென்றும் கூறுகிறது.

## நிர்மாலியம் ஆறுவகை

1. ஆலயத்திற்கு விடப்பட்ட கிராமம் பூமி முதலியவை தேவஸ்வம்.
2. ஆலயத்திற்கு வைக்கப்பட்ட ரொக்கம், ஆபரணம், வஸ்திரம் முதலியன தேவதாதிருவ்யம்
3. பாகம் செய்து நிவேதிக்காமலிருப்பது நைவேத்தியம்
4. இறைவனுக்கு அர்ப்பணம் செய்தது நிவேகிதம்
5. பிரசாதத்தில் ஆறில் ஒரு பாகம் சண்டத்திருவயம்
6. அபிஷேகாதி திருவியம் பஹிக்ஷிப்தம் என்பனவாகும்.

தேவஸ்வம், வேதாத்ருவ்யம், நைவேத்யம், சண்டத்ருவ்யம் இந்நான் கும் நிர்மாலியமெனப்படும். இவைகளை கிருஹித்தல் கூடாது. பிரசா தத்தை நான்கு பாகஞ்செய்து ஒரு பாகம் ஆசாரியருக்கும், ஒருபா கம் மற்றுமுள்ள பணிவிடைகாரர்களுக்கும், எஜமானர் முதலிய அடி யவர் பக்தர்கள் முதலியவர்களுக்கு இரண்டு பாகமாக நான்கு பங்காக கிருஹிக்க வேண்டும். பஹிக்ஷப்தமான அபிஷேக அலங்கார அர்ச்சனை நிர்மாலியங்கள்ள ஆசாரியரே அடைதல் வேண்டும் என்று சிவாகமம் கூறுகிறது.

### தீபாராதனை

பூஜை வேளையில் நிகழும் நிகழ்ச்சிகளில் தீபாராதனை மிக முக்கியமானதாகும். வழிபடும் மக்கள் பூஜை நிகழும் வேளை ஏனைய அம்சங்களைத் தவிரவிடினும் தீபாராதனை நடக்கும் பொழுது வீசும் தீப ஒளியில் இறைவன் திருக்கோலங்கண்டு தரிசிப்பர். தீபாராதனையின் போது தரிசித்தல் பெரும் பேறுகளையளிக்கும் என்பதாம். தீபம் பஞ்சாராத்ரீக தீபம் என்றும், சக்தி தீபம் என்றும் இருவகைப்படும். ஆராத்திரிக தீபவிஷயத்தில் பிரம்மத்திலிருந்து தோன்றுவதையும், சக்தி தீபவிஷசயத்தில் தோன்றிய மிருகம், பக்ஷி தேவதைகள் முதலிய பசுக்கள் சக்தியின் வகைப்பட்டு பதியாகிய இறைவனிடம் சார்ந்து அனுக்கிருஹம் பெறுவதையும் விளக்கும். பாண்டிய நாட்டில் சிந்தாந்திகள் விரும்பிப் பெறுகின்ற அனுக்கிர நிலையாகிய சக்திதீபமே ஆராதிக்கப்படுகின்து. இவை ஆகம பேதமுமாகும்.

ஒவ்வொரு மூர்த்திக்கும் நடைபெறும் தீபாராதனைகளில் மூலமூர்த்திக்கு ஒவ்வொரு நாளும் சாயரசைஷகாலங்களில் சோடஷ தீப ஆராதனையும், மற்றக் காலங்களில் பஞ்சோபசார தீபாராதனையுமே நடைபெறும். உற்சவ காலங்களில் உற்சவ மூர்த்திக்கும், விசேஷமாக நைமித்திக காலங்களிலும் சோடஷ தீப ஆராதனை செய்ய விதிக்கிறது. பரிவார மூர்த்திகளுக்கு காலசந்தியிலும், சாயரக்ஷையிலும் இவ்விரண்டு காலங்களில் பஞ்சோபசாரம் அல்லது மூன்று உபசாரம் செய்ய விதிக்கிறது. ஆகவே பரிவார தேவதைகளுக்கு நித்திய பூஜையில் சோடஷ தீப ஆராதனை கூடாதென்பதாம்.

எப்போதும் மேல்நோக்கியே எரிவதாய் யக்ஞங்களுக்கு உதவுவதாய் ஒரு தீபத்திலிருந்து எத்தனை தீபங்கள் ஏற்றினாலும் ஒளி குறையாததாய் ஒளியும் தரும். ஒரு சேர பரப்பும் தீபங்கள் அக்னி தேவரின் அம்சம் என்றும், மின்சாரம் போன்ற ஒளி விளக்குகள் அங்ஙனம் தேவ அம்சம் என்றும் கருதுவதில்லை என்பதும் தெளிக.

ஆகவே ஆலயங்களில் மின்சார விளக்குகளை மக்களின் வசதிக்காக ஏற்றினாலும், நெய் அல்லது எண்ணெய் விளக்குகளையே மூர்த்தியின்

இருப்பிடமாகிய கர்ப்பக்கிருஹத்தில் ஏற்ற வேண்டும். பைசாசாதி தீபங்களை ஏற்றக் கூடாதென்பதாம்.

நமது ஆலயங்களிலுள்ள தீபங்கள், பிரதிஷ்டா காலத்தில் சிவாக் கினியிலிருந்து சம்ஸ்கரிக்கப்பட்டு ஏற்றப்பட்டவை. ஆலயங்களில் அவற்றின் வருவாயைப் பொறுத்து மூலஸ்தான மூர்த்தி முன்பு வாடா விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும். சில ஆலயங்களில் அவை நெய்விளக்காகவும் இருக்கும். அப்படியுள்ளஆலயத்தில் அருள் சான்னி யத்தியம் அதிகமாகவிருக்கும். மற்ற பரிவார மூர்த்திகளுக்குள்ள விளக் குகள் பெரும்பாலும் பூஜா காலங்களிலேயே ஏற்றப்படும். விளக்குகளை ஏற்றும் போது உடற் சுத்தமும், உள்ளம் சுத்தமும் உடையவராய் ஆசா ரத்துடனும், பயபக்தியுடனும் மூர்த்தியின் மூலமந்திரம் உச்சரிக்கும் தகுதி வாய்ந்த பூஜகர் வகையினரே அந்த விளக்குகளை ஏற்ற வேண்டுமென் றும் மற்றவிடங்களில் வேற்றவர்கள் ஏற்றுதல் என்ற நியதி நம் நாட்டுக் கோயில்களில் இன்றும் வழக்கத்தில் இருந்துவருகிறது.

இந்த தீபங்களைப் போலவே தீபாராதனை தட்டுகளும் பிரதிஷ்டிக் கப்பட்டவை அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தேவதா மூர்த்திக ளாக கொள்ளக்கிடக்கின்றது.

பரிகாரகர் தரும் தீபத்தை நிரீக்ஷணம் முதலிய சமஸ்காரங்கள் செய்து புஷ்பத்தால் அருச்சித்துக் கையில் வாங்கி சுவாமிக்கு நேரே உயர்த்தி முகம், கண்கள் மூக்கின்நுனி, கழுத்து, மார்பு, கால்கள் இவ்வி டங்களில் தனித்தனி பிரணவாரமாக காண்பித்து பிரத்தியேகமாய் மும்முறை சுற்றிக் காண்பிக்க வேண்டும்.

முதற் சுற்றினால் பூமியையும், இரண்டாவது சுற்றினால் ஆகாயத்தை யும், மூன்றாவது சுற்றினால் சுவர்க்கத்தையும் ரக்ஷித்தலை புலப்படுகின் றது. அன்றியும் முதல் சுற்று உலக நன்மைக்காகவும், இரண்டாவது சுற்று கிராம நன்மைக்காகவும், மூன்றாவது சுற்று உயிர் நன்மைக்கா கவும் எனக் குறிப்பிடுகின்றன.

## சக்தி தீப வரிசை

புஷ்பதீபம், சர்ப்பதீபம், புருஷாமிருக தீபம், விருஷபதீபம், யானை தீபம், புலி தீபம், குதிரை தீபம், அன்ன தீபம், குக்குடதீபம், சக்தி தீபம் இவை 11, 9, 7, 5, 3, 1 மலர் தட்டுகளாம். கும்பதீபம், ஆமை தீபம், மேரு தீபம், நட்சத்திர தீபம், கற்பூர தீபம் காண்பித்து பஸ்மரக்ஷை சாத்தலாகும்.

இவையாவும் அக்னி சம்பந்தமான ஒரே உபசாரமாகும் ஆதலால் ஆகம பேதத்தின் படி கூடுதலும், குறைதலும், மாறுதல்களும் உள்ளன. இவற்றால் தோஷமில்லை என்பதாம்.

சக்தி தீப ஆராதனையில் முதலில் காண்பிக்கப்படுகின்ற தீபத்திற்கு நிரீக்ஷணாதி சுத்தியுடன் பூஜித்து தூபதீப அக்கியங்கொடுத்தபின் சுவாமிக்கு காண்பிக்கவேண்டும் இந்த ஆராதனை சமயம் மணி அடிக்கக்கூடாது. அந்தந்த சக்தி தோன்றிய வசத்தின்படி சுத்த நிருத்த கீத வாத்யம் நடைபெறச் செய்ய வேண்டும். மற்றும் தீபம் காண்பிக்கப்படும் போதுதான் மணி அடித்தலும், சகல வாத்திய கோஷமும் செய்ய வேண்டும்.

தீபாராதனையின் பின், விட்டுவிட்டு மணியை அடித் துக் கொண்டு கண்ணாடி, குடை, சாமரை, விசிறி. கொடி, ஆலவட்டம் இவற்றை தீபங்களைப் போல் காண்பித்து உபசரிக்கும் மரபு நிலவி வருகிறது.

இதன் பின் மந்திர, சுவர்ண. லாஜ, புஷ்பாஞ்சலி, செய்து பவன் முதலிய அஸ்டநாமாக்களால் அர்ச்சித்து தருப்பிக்க வேண்டும்.

## அருச்சனை

இறைவன் பெயர்களை ஒவ்வொன்றாக கூறி மலர் தூவிஅருச்சித்தல் ஆகம வழக்கு. யசுர் வேதம் சதருத்ரீயத்தில் இறைவனுடைய நாமங்கள் கூறப்பட்டுள்ளன. இவை நூறு ஆனமையால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. நூறு முந்நூறாகவும், ஆயிரமாகவும், இலக்ஷமாகவும், கோடியாகவும் இறைவன் நாமங்களை எண்ணிறந்த அளவிற்குக் கூறி அருச்சிக்கும் முறை விதிக்கின்றன.

அருச்சனையில் ஈடுபடுகின்றவனின் மனம், இறைவன் பாததாம ரையில் படிகின்றது. வாய் அவன் புகழ்பாடுவதில் ஈடுபடுகின்றது. கரங்கள் இரண்டும் அவனை அருச்சித்தலில் தொழில்படுகின்றன.

அவன் புகழ் கூறும் ஒவ்வொரு நாமமும் காதில் விழும் போது காது அதைக்கேட்டு பெரும் பயன் எய்கின்றது. அவனைத்தியானிப்பதில் புத்தி செல்கின்றது. இருகண்களும் அவன் திருக்கோலத்தைக் கண்டு அதன்வயமாகின்றனவாம்.

இறைவனை அருச்சித்தல் அரும் பெரும் பேற்றினை எய்துவிக்கும் இவ்வருச்சனை நித்திய பூஜையிலும், நைமித்திக காமிய கிரியைகளிலும் இடம் பெறுவன. இவை 8, 16, 108, 308, 1008 முதலியனவாம்.

## தோத்திரங்கள்

பூசைக்காலங்களில் அருச்சனையில் இறுதியில் நீராஞ்சனம் காண் பித்து பின் வடமொழியும், தென்தமிழும் ஆகிய தோத்திரங்களால் இறைவனை உவப்பிக்கச் செய்ய வேண்டும். அவையாவன நான்கு வேதங் களையும், சிவாகமங்களையும். சூத்திரம் முதலியவைகளில் தேர்ந் தெடுக்கப்பட்ட மிகச்சிறிய அளவிற்கு ஓதிய பின் திராவிட தமிழ் வேத மாகிய தேவாராதி, புராணம் முதலிய பன்னிரு திருமுறைகளை ஓதல் வேண்டும். அல்லது பஞ்சபுராணமென்னும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் அவ்வைந்தும் ஓதி பின்பு முருகன் சன்னிதியாக இருப்பின் திருபுகழையும் ஓதலே முறையாகும். பின்பு வாழ்த்து கூறி ஆசீர்வசனங்களை சொல்லி நீராஞ்சனம் செய்து பூஜா ஜெபசமர்ப்பணம் செய்க. அல்லது நித்யோற்சவத்தின் கால பூஜை முடிவிலும் சமர்ப்பணம் செய்யலாம்.

## பூஜா ஜப சமர்ப்பணம்

பரார்த்த பூஜையின் பலன் உலக க்ஷேமத்திற்காக உதவும் பொருட் டும், அர்க்கிய ஜலத்துடன் ஈஸ்வரார்ப்பணஞ் செய்தல் வேண்டும்.

யாதொரு தேவையும் இல்லாதவன், இறைவன் ஆதலால் அவனுக்கு ஈயப்படுவனவெல்லாம் உலகத்தையே சாரும். அர்ப்பணம் செய்யப்ப

டாதவை அவரவர்களையே சேரும் என்பதாம்.

## விபூதிப் பிரசாதம்

பூஜா காலம் முடிந்தபின் ஆசாரியர் பஸ்மபிரதான மண்டபத்தில் கூர்மாசனத்தில் அமர்ந்து பாத்திரத்திலுள்ள விபூதியை நிரீக்ஷணாதி சுத்தி செய்து பஞ்சாக்ஷர மந்திரம் ஜெபித்து ரக்ஷை செய்து பக்தர்களுக்கு வழங்கவேண்டியதாகும்.

## கொடுக்கும் முறை

ஆசாரியர் வலதுகை பெருவிரலும், மோதிர விரலும் சேர்த்து விபூதியை சிறிய அளவில் எடுத்து பக்தர்களுக்கு கொடுக்க வேண்டும்.

## விபூதி பிரசாதம் வாங்கி அணியும் முறை

ஆலயத்தில் வழங்கப்படுகிற அந்த விபூதி விதிப்படி சேகரிக்கப் பட்ட தூய்மையுடன், பஞ்சாக்ஷர மந்திரசக்தி பதியப்பெற்ற புனிதத் தன்மை வாய்ந்தது. குருக்களான ஆதிசைவ சிவாசாரியரிடமிருந்தே அதனைப்பெற வேண்டும். வேற்றவர்களால் ஆலயத்தில் விபூதி கொடுக் கவும் கூடாது, அதனை பெறவும் கூடாது .ஆலயத்தில் ஒருபோதும் விபூ தியைத் தாமே எடுத்துக் கொள்ளக் கூடாது. அவை நம் சைவசமய சாத் திரநெறிக்கு முற்றிலும் விரோதமாகும்.

திருவருள் நிறைந்த விபூதி பிரசாதத்தை மிக்க மரியாதையுடனும், பயபக்தியுடனும் பெற்று கீழே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவ சிவ என்று தரித்தலே முறை.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்

– திருமந்திரம்

சைவ சமயசாத்திரப்படி விபூதி கொடுக்க அருகதையில்லாதவர் களுக்கும், ஆசாரியர் தாம் நேரில் வழங்கமுடியாத கர்ம சண்டா ளர்களுக்கும், இலையில் வைத்துத் தர அதனைப் பெற்று இறைவனை

தியானித்து அணிந்து கொள்ளவேண்டும் என்பதாகும்.

கால பூஜை முடிவதற்குமுன் ஒவ்வொரு சன்னதியிலும் இடை இடையே விபூதி வழங்க ஆகமம் விதிக்கவில்லை என்பதுடன் இடையே ஒவ்வொரு சன்னதியிலும் வழங்குவதால் பூஜா காலம் தவறி தாமதம் ஏற்படவும் கூடுமென்பதையும் அறிய வேண்டும்.

## பரிவார பூஜை

மூலஸ்தான பூஜையின் பின் கர்ப்பக்கிருஹ ஈசான திக்கிலுள்ள அல்லது அர்த்தமண்டபத்திலுள்ள போகசக்தி பூஜையும், அர்த்தமண்டப துவாரத்தின் முன்னிருக்கும் உள்நந்தியும், அதன்பின் நடேசர். சோமாஸ்கந்தர், சந்திரசேகர் முதலிய உற்சவமூர்த்தி சன்னதிகளிலும், பின்பு பரிவார கோஷ்ட தேவதைகளான நிருத்தகணபதி, தெக்ஷ்ணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை, பின்ஜ்வரதேவர், அறுபத்துமூவர், ஸ்ரீகண்ட பரமசிவம், சப்பதமாதர், விக்னேசவீரபத்திரர், கன்னி விநாயகர், விஷ்ணு, சாஸ்தா, பஞ்சலிங்கம், வாயுமூலை சுப்பிரமணியர், லெக்ஷ்மி, சரஸ்வதி, சனீஸ்வரர் அல்லது நவக்கிரஹம், இதன் பின் கெர்ப்பாவரணத்துள் இருக்கிற அம்மன் சன்னதியில் பூஜை, இதன்பின் அதிகார நந்தி, வெளிவிருஷபம், கொடிமரம் முதலிய பரிவார பூஜை செய்து முடிக்க வேண்டும்.

அம்மன் சன்னதி, சகஜ, ஸ்வதந்திர, ஆலயமாய் தனித்து இருந்தால் துவார கணபதி முதல் முறையே பூஜை முடித்து வெளிப்பிரகாரத்-துள்ள மூர்த்திகளுக்கும் பூஜிக்க வேண்டியதாகும்.

## நித்தியா ஹோமம்

பரிவார பூஜைக்குப்பின் நடைபெறுவது நித்தியாக்னி காரியம். இதற்காக சுவாமி சன்னதியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கும் குண்டத்தில் பூஜித்து மந்திரங்களுடன் நெய், அவிசுபொரி, கடுகு, எள்ளு பல வகை சமித்துகளால் ஆகுதி கொடுத்து பூர்ணாகுதி சம்பாதஹோமம் பரிதிவிஷ்டர தேவதாபலி ஹோம சமர்ப்பணம் வரை செய்வதானது நித்திய ஹோமம் எனப்படும்.

இவை தேவர்களுக்கு காந்தியையும், வசீகரத்தையும் உண்டுபண்ணுகிறது, யாகத்தால் வழிபட்ட தேவர்கள் நாம் நாடிய போகத்தை நல்குவர். உணவினின்றும் உயிர்கள் உண்டாகின்றன. உணவு மழையினின்றும் உண்டாகின்றது. மழை யக்ஞத்தினின்றும் உண்டாகின்றதாம்.

ஆலய ஆராதனைகள் முன்பு அன்றைய இந்து அரசரின் கீழ் ஆகம முறைப்படி வெகு அழகாக நடைபெற்றன. அதுபக்தியையும், சமய நூலறிவும் பெருகிச் செழித்து வாழச் செய்தது எனலாம்.

அக்னிகாரியம் முடிந்ததும், அந்த பஸ்ம (ரக்ஷை) மூர்த்திக்குத் தரிக்க வேண்டும். இதனால் பிம்பசக்திகள் அடியார்களின் அன்பு, அறிவு, ஆற்றலுக்குத் தக்கவாறு சிக்கனமான முறையில் அருள் விநியோகமாகும் பொருட்டு ரக்ஷை இடப்படுகின்றதாம்.

## நித்தியோற்சவம்

இவை நித்தியாக்னிகாரியம் முடிந்தபின் நித்தியோற்சவம் நிகழ்தல் வேண்டும். தினந்தோறும் மூன்றுவேளைகளிலாயினும், இருவேளைகளிலாயினும், ஒருவேளையிலாயினும் நித்தியோற்சவத்துடன் நித்தியபலி இடுதல் வேண்டும் "நம" என்பதை இறுதியாகக் கொண்டு அர்ச்சித்தலையும் "சுவாஹா" என்பதை இறுதியாகக் கொண்டு . பலியையும் இடுவது முறை.

## பலி அளவு

மயில் முட்டையின் அளவுகொண்ட உருண்டை வடிவமான அன்னத்தினால் பலி இடுவது உத்தமம். எலுமிச்சம்பழ அளவு மத்திமம், நெல்லிக்கனி அளவு அதமம் என்று கூறப்படுகின்றது.

நித்தியாக்னி முடிந்ததும் சிவிகையில் ஸ்ரீபலி நாதரை அலங்கரித்து பரிசாரகன் தோளில் ஏற்றி எழுந்தருளச் செய்து ஆச்சாரியர் மணியை விட்டு விட்டு ஒவ்வொரு முறையாக அடித்துக் கொண்டு இறைவன் சன்னிதி வாசலில் இருபக்கமுள்ள பீடத்தில் துவாரபாலகர்களுக்கும் முன்னிலிருந்து வரிசையாக எட்டுதிக்குகளிலும் நந்தியின் முன்பு விருஷ

பத்திற்கும் பலியிட்டு, தெக்ஷணாமூர்த்தி முன்புள்ள பீடத்தில் சப்தமா தர் வீரபத்திரர், விக்னேஸ்வரர்க்ளுககும், இதற்கு வெளியிலுள்ள பிரகா ரத்தில் இந்திராதி எட்டு தேவர்களுக்கும், பின் ஈசானத்திற்கு தெற்கில் பிரம்மாவிற்கும், நிருதிக்கும், வடக்கில் விஷ்ணுவிற்கும், பலியிட்டு பத்ரலிங்கமாகிய மகா பலிபீடத்தில் கர்ணிகையிலும், தளத்திலும் மத்தியிலும் முறையே உரிய தேவர்களுக்கு பலியிட்டு வஜ்ராதிகளுக் கும் பலியிட்டு, உற்சவம் முடித்து சுவாமி முன்பு ஸ்ரீபலி நாதரை வைத்து நீராஞ்சனாதி உபாரம் செய்யவேண்டும். ஸ்ரீபலியைத் தொடர்ந்து சுத்த நிருத்தம், பேரி, சங்க மத்தள சகல வாத்தியம் வரிசையாக வாசித்தல் வேண்டும்.

மூர்த்திகளுக்கு ஆவரண தேவதைகள் உள்ளன போன்று, ஆலயங்களுக் கும் ஆவரணங்கள் உள்ளன. அவை கோவில் பிரகாரங்களில் பிரதிஷ்டிக் கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிராகாரத்திலும் அமைக்கப்பட்டிருக்கும் பலிபீடங்களில் அந்தந்த ஆவரண தேவர்கள் வசிக்கும் ஸ்தானமாகும். அவர்களுக்கு பலியிடுவதே 'நித்தியோற்சவம்' எனப்படுவது இறை வனே பலி தேவராக மூர்த்தங் கொண்ட பிரகாரங்களில் வலமாகச் சுற்றி வந்து அந்தந்த ஆவரண தேவர் முன்னின்று தாமே நேரில் அவருக்கு பலியிடுவர் என்பதாம்.

இந்த ஸ்ரீபலி சுற்றுதல், பிரகாரங்களில் வலஞ்சுற்றி வரும் காந்த ஓட்டத்தை பண்படுத்துவதாகும். ஆகையால் பூஜாகாலங்களில் ஆவ ரணபலிபீடங்களுக்கு இடையே குறுக்குமறுக்குமாக அடியார்கள் நட மாடுதல் கூடாது.

இவற்றுடன் காலசந்தி பூஜை முடிவடையும்.

## உஷக்காலப் பூஜை

இப்பூஜை நடுப்பகலில் நிகழ்வது, அதாவது 10 நாழிகை முதல் 16 நாழிகைக்குள் செய்வதாகும். ஆசாரியன் நித்யகர்மானுஷ்டங்களை முடித்துக்கொண்ட பின் ஸ்நாபனம் முதலியன வைத்து பூஜித்து கர்ப்பாவரண பூஜை சுவாமிக்கு ஆசன, ஆவாஹன, ஆவரண பூஜை

முடித்த பின் அம்பாள் சந்நிதியிலும் பூஜித்து நித்தியாக்னிகாரியம், நித்தியோற்சவத்துடன், சண்டேஸ்வர பூஜைவரை செய்வது உச்சிக்காலமாகும். இதன்பின் கதவு சாத்தப்படும்.

## சாயங்காலம்

நித்திய பிரதோஷ வேளையாகிய சூரியாஸ்தனமாவதற்கு முன் 3.45 நாழிகை முதல் அஸ்தமனம் வரையில் சாயங்காலமாகிய சாயந்தனோப சந்தி பூஜையாகும். இவை பிரதோஷம் என்றால், இரவின் முகம், என்பதாம். ஆகவே இரவின் தொடக்கமான மாலைப் பொழுதே பிரதோஷமெனப்படுகிறது. இந்த பூஜையில் பஞ்ச மகாசப்தம் முழங்க கோயில் கதவு திறக்கப்பட்டு, தீபம் முதலியன சரி பார்த்து முறையே அபிஷேக, அலங்கார, ஆவரணபூஜையும், சோமன் முதல் பரிவார தேவர்களுக்கு பூஜையும் செய்யப்படுகிறது.

## இரண்டாம் காலம்

இது சாயங்கால மகாசந்தி பூஜையாகும். இது சுவாமி அம்பாளுக்கு மட்டில் நடைபெறும். இதன்பின் நித்யாக்கினி நித்தியோற்சவ ஸ்ரீபலியுடன் முடிவுறும். இவை சூரியாஸ்தமன முதல் 7.30 நாழிகைக்குள் செய்யவேண்டும்.

## அர்த்தஜாமம்

இரண்டாம் காலம் முடிந்தபின் 3.45 நாழிகைக்குள் அர்த்தஜாமம் எனப்படும். இக்காலத்தில் துவார பூஜை இல்லாமல் அபிஷேகம் செய்து வெள்ளை வஸ்திரம் தரித்து, அலங்கரித்து ஆசன மூர்த்தி மூலத்தால் பூஜித்து, நிவேதித்து, அம்பாள், சந்திரசேகரர், உற்சவர், நடேசர் சுவாமி வரை ஒழுக்க கிரமமாய் ஆராதனை செய்து துவார பரிவார தேவதையை சம்யோஜித்துக் கொள்வதாம். பின் பாதுகாராதனம், உள் கதவுகள் சாத்தப்பட்ட பின் சயனாலய பூஜை, சண்டேஸ்வர, வைரவர் பூஜை வரை முடிப்பதாகும்.

# இரவுப் பள்ளியறைப் பூஜை

சைவாலயங்களில் பள்ளியறை பூஜை மற்ற பூஜாகாலங்களில் இறைவன், இறைவி, இருவரையும் வெவ்வேறாக பிரித்து வழிபாடுகள் இயற்றப்பட்டன. இப்போதும் இறைவனின் இடப்பாகத்தில் இறைவியை சேர்த்து லயப்படுத்தி ஒன்றாக வணங்கி வழிபடுதலேயாம். இப் பூஜையின் போது பொன்னூஞ்சல் முதலிய ஊஞ்சல் பாட்டுகளை ஓதி இறைவனயும், மக்களையும் உவப்பிக்க வேண்டும் என்பதாம். பின்னர் கதவு சாத்தப்படும்.

# சண்டேஸ்வர பூஜை

இறைவன் நிருவாலியங்களை சண்டேஸ்வரருக்கு சமர்ப்பிக்கப் பட்டு அவருக்கு பூஜை செய்யப்படும்.

இந்த பரார்த்த பூஜையின் பலனால் கோவிலின் நாற்புறமும் நாடெங் கும் அருள் பரவுமாம். பூஜையின் ஒழுங்கையும், ஊக்கத்தையும் பொறுத்து அந்த அருளானது அந்த கிராமம், அதற்கு வெளியில் பிரதேசம், மாவட் டம், தலைநகரம், ராஜ்ய பரிபாலனத்தில் நாடெங்கும் நாலாபக்கமும் பரவும் என்பதாம்.

சண்டேஸ்வர தரிசன காலத்தில் சுடக்குப் போடுவதும், **நூலைபிய்த் துப் போடுவதும் குற்றமாகும்.**

சண்டேஸ்வருக்குரிய தாளமுத்திரை அதாவது இடது உள்ளங் கையில் வலது கையால் மும்முறை தட்டி அவரை தொழுது தரிசித் தலே முறையாகும்.

சாஸ்தாவை அவ்வாலயத்தில் தொங்கவிட்டிருக்கும் மணியை மும் முறை அடித்து தரிசித்தலே முறை.

விநாயகரை குட்டிக்கும்பிடுவதே முறையாம். இவ்விதியின்படி தொழு தலே நம் சமய சாஸ்திரவிதியாகும்.

# வைரவ பூஜை

அர்த்த ஜாம முடிவில் வைரவர் பூஜை இடம் பெறும். ஆசாரியர் வைரவர் சன்னதியை அடைந்து விதிப்படி துவார பூஜை முதல் மூர்த்தி ஆவரண பூஜை வரை முடித்து ஆராதனை செய்தபின் அவரு டைய பரிவாரங்களாகிய வேதாள கணங்களுக்கு பாயச அன்னத் தால் பலிபோட வேண்டியதாகும். வைரவருக்கும் மற்றும் நைவேத் தியம் செய்வதுடன், உழுந்து வடை மாலை அணிவித்தலும், நிவேதித் தலும் மிக முக்கியமாகும். ஏனென்றால் அவை கிராம ரகைஷயின் பொருட்டு எல்லா ரோகங்களும் நாசமாகும் பொருட்டும் கொடு மையான இடையூறுகளைப் போக்கும் பொருட்டும் வைரவருக்கு வடை மாலை அணிவித்தும், நிவேதித்தும் அவருடைய பரிவார கணங்களுக்கு பாயசான்னத்தால் பலியும் சமர்ப்பிக்க வேண்டும்.

இதன்பின் சயனாலய முத்திரை தண்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதனால் ஆலயத்தில் அருள் சக்தியுள்ள சூக்ஷ்ம நிலையை இராக்கா லங்களில் வலிமீறி நிற்கும் அசுரர்களால் பாதிக்கப்படாமல் பாதுகாப் பதே வைரவர் வேலையாம். இதுவன்றி மனிதர் செய்யவேண்டிய பாரா வேலையை அவர்செய்வாரென்று கொள்வது தவறாகும்.

இறைவன் தரிசன பலத்தால் மலமறைப்புக்கள் நீங்கப் பெற்றவர். ஆணவத்தின் அணுத்தன்மை நீங்கி வியாபகத் தன்மை எய்தி நிற்பர், ஆகவே வைரவர் அழுக்கு மணம் நீங்கிய அம்மணர். நிருவாணியாக காடசி அளிக்கிறார்.

ஆன்மாவிற்கு புறத்திருந்து வரும் மலமறைப்பு மனிதனுக்கு செயற் கையாகும். துணி மறைப்புக்கு ஒப்பிடப்பட்டு அம்மறைப்பை அகற் றுவதான அறிகுறிப் பொருளை உண்மை அனுபவத்திற்கு கொண்டு வருதலே ஆலயத்தில் வைரவருக்கு ஆடை அணிவிக்கவில்லை என்லாம்.

இந்த நிர்மல வைரருடைய தரிசனம் ஆன்மாவின் விடுதலையைக் குறிபிடுவதாம்.

# பூஜைகள் தப்பிடின் பலன்களாவன

பூஜை இல்லாவிடில் ரோகமும், புஷ்பமில்லாவிடில் குலநாசமும், சந்தனமில்லாவிடில் குஷ்ட ரோகமும், ஜலமில்லாவிடில் தூக்கமும், தூபமில்லாவிடில் சுகத்தின்நாசமும், தீபமில்லாவிடில் பொருள் குறைவும், நைவேத்தியமில்லாவிடில் துர்ப்பிக்ஷமும், மந்திரமில்லா விடில் தரித்திரமும், வஸ்திரமில்லாவிடில் மகாரோகமும், ஹோ மில்லாவிடில் குலக்ஷயமமும், பலி இல்லாவிடில் கிராமநாசமும், நெய் இல்லாவிடில் ரணமும், வில்வம். அறுகு, அக்ஷதை இல்லாவிடில் சத்ருபயமும், மணி இல்லாவிடில் செவிட்டுத் தன்மையும், முத்திரை யில்லாவிடில் அசுரபயமும், நித்யாக்னி காரியமில்லாவிடில் பூஜை நிஷ்பலம், நித்தியோற்சவமில்லாவிடில் நாட்டிற்கும் அதனை ஆளும் அதிகாரிகளுக்கும், பயமும், சர்வத்திவ்யமில்லாவிடில் அளவு கடந்த தீங்கும் உண்டாகும்.

ஆதலால் சர்வமுயற்சியாலும் பூஜைகள் பக்தியோடு லோபமில்லா மல் எல்லா திரவ்யங்களுடனும், மந்திரகிரியாபாவனைகளுடனும், அர்ச்சகர்களும், ஆலய அதிகாரிகளும், வழிபடும் அன்பர் அடியார் களும் செவ்வனே விதியிற் கூறிய வண்ணம் முறை பிறழாமல் செய்து வர வேண்டியதாகும்.

## உபசார வகை

| | |
|---|---|
| 1. ஆசனம் | 2. ஆவாஹனம் |
| 3. அர்க்கியம் | 4. ஆசமனம் |
| 5. பாத்யம் | 6. அபிஷேகம் |
| 7. ஆடை | 8. உபவீதம் |
| 9. சந்தனம் | 10. புஷ்பம் |
| 11. தூபம் | 12. தீபம் |

13. நைவேத்தியம் 14. முகவாசம்

15. தீபாராதனை 16. கற்பூர நீராஞ்சனம்

17. பஸ்மம் 18. கண்ணாடி

19. குடை 20. தாமரை

21. விசிறி 22. கொடி

23. ஆலவட்டம் 24. மந்திரபுஷ்பாதிகள்

25. அருச்சனை 26. வேதப்பகுதி

27. திராவிடவேதம் 28. பிரதக்ஷணம்

29. நமஸ்காரம் 30. ஆசீர்வசனம்

31. நல்வாழ்த்து நவிலல் 32. ஜெபம்

33. சுளுகோதகம் 34. சமாப்பணம்

35. பராங்முகார்க்கியம் சம்யோஜனம்

36. வீபூதி வழங்கல்

ஆகிய 36ம் இவற்றுடன் தீபவரிசையிலுள்ள 16 க்கு 2 நீக்கி 14ம் ஆசாரிய பூஜனம் 1ம் சேர்த்து ஆக 51 வகை உபசாரமாகும்.

# மகா பிரதோஷகால பூஜை

ஒவ்வொரு மாதத்திலும் வருகிற சுக்ல, கிருஷ்ண பக்ஷங்களின் திரயோதசி திதியன்று சூரியாஸ்தமனத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை அளவில் நடராஜர் சுவாமி அம்பாள், நந்தி, விருஷபம் இந்த மூர்த்திக்கு அபிஷேக அலங்காராதி, நிவேதனமுடித்து ஸ்ரீபலிநாதர் உற்சவத்துடன் பலிசமர்ப்பித்து விநாயகர் நடராஜர் இறைவன் இறைவி இவர்களை அர்ச்சித்து தீபாராதனைகள் முடித்து உள்நந்தி வெளிவிருஷ

பங்களுக்கு விசேஷ பூஜை செய்வதேயாம்.

இந்த பூஜையானது அன்றையதினம் அதிகமாக ஒருகாலம் நடத் தப்படும் அதன்பின்னரே அன்றைய தினம் நடைபெற வேண்டிய நித் தியபூஜா காலங்கள் தொடர்ந்து நடைபெறும். இவ்வேளையில் வழிபடும் பக்தர்கள் எல்லா நலன்களையும் பெற்று வாழ்வார்களாம். சனிக்கிழமை யும் திரயோதசியும் சேர்ந்தால் மகாவிசேஷமாம்.

# நவராத்திரி பூஜா காலம்

ஒவ்வொரு வருஷத்திலும் வருகிற புரட்டாதி மாதத்தில் சுக்லபக்ஷ நவமி திதியை பிரதானமாகக் கொண்டு நடத்தப்படும் விசேஷபூஜை உற்சவம் ஆகும். இந்த நவராத்திரி நாளில் ஆலயத்தில் மூர்த்திகளுக்கு இரவில் விசேஷ அலங்காரங்களுடன் பூஜை வழிபாடு நடைபெறும். இந்தப் பூஜையானது சாயரக்ஷை பூஜையில் நித்தியோற்சவம் நடத்திய பின்னரே கொலு தீபாராதனைகளைச் செய்யவேண்டும். இதன்பின் அர்த்தஜாமம் தொடங்கும் என்பதாம்.

நவராத்திரி கொலு வழிபாடானது இறைவன் எல்லாமாய் நின்ற விஸ்வரூபத்தையே குறிக்கும். இதன்மறுநாள் தசமிதினம். மாலையில் சுவாமி குதிரை வாஹனத்தில் உற்சவம் கொண்டருளி பரிவேட்டை சமீ பூஜை, அம்பு போடல் முதலியனவும்நடைபெற வேண்டியதாகும்.

# சிவராத்திரிகால பூஜை

சிவராத்திரி ஐந்து வகைப்படும் அவையாவன

1. **நித்திய சிவராத்திரி** : அதாவது பன்னிரண்டு மாதங்களிலும் வரும் சுக்ல கிருஷ்ண பக்ஷங்களில் உள்ள சதுர்த்தசி திதி, ஆக ஒரு வருஷத்தில் சுமார் 24 சதுர்த்தசியும் நித்திய சிவராத்திரி எனப்படும்.

2. **பக்ஷ சிவராத்திரி** : அதாவது தைமாத கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் சதுர்த்தசி முடியவுள்ள காலம் பக்ஷ சிவராத்திரி எனப்படும்.

**3. மாத சிவராத்திரி :** அதாவது மாசி மாத கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி பங்குனி மாத முதல் திருதியை, சித்திரை மாத கிருஷ்ணபக்ஷ அஷ்டமி, வைகாசி மாத முதல் அஷ்டமி, ஆனி மாத சுக்லபக்ஷ சதுர்த்தி, ஆடி மாத கிருஷ்ணபக்ஷ பஞ்சமி, ஆவணி மாத சுக்கலபக்ஷ அஷ்டமி, புரட்டாதி மாத முதல் திரயோதசி, கார்த்திகை மாத முதல் பஞ்சமி பின்வரும் அஷ்டமி, மார்கழி மாதம் இருபக்ஷங்களில் வரும் சதுர்த்தசி, தை மாத சுக்கலபக்ஷ திருதியை இவைகள் மாத சிவராத்திரி எனப்படும்.

**4. யோக சிவராத்திரி :** அதாவது திங்கட்கிழமையில் இரவும் பகலும் அமாவாசை இருந்தால் அது யோக சிவராத்திரி என்பதாம்.

**5. மகா சிவராத்திரி :** அதாவது ஒவ்வொரு ஆண்டிலும் மாசிமாத கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியிலே வருவது மகாசிவராத்திரி இந்த நாள் இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் மூன்றே முக்கால் நாழிகை காலம் **லிங்கோற்பவகாலம்** இக்காலம் மகாவிசேஷமாகும்.

இந்த நாளில் நித்தியபூஜையின் பின் நான்கு ஜாமத்திலும் விசேஷ ஸ்நபனத்துடன் அபிஷேக அலங்கார அர்ச்சனை, நிவேதன தீபாரா தனை முடித்து நித்தியோற்சவம் சண்டேஸ்வர பூஜையுடன் முடிவுறும். இப்பூஜையில் பரிவார பூஜை கூடாது. நான்கு காலங்களும் முடிந்த பின் கேவலம் அர்த்தஜாமத்திற்காக அஷ்டபுஷ்பம் சாத்தி பாதகாராதான முதல் வைரவர் பூஜை வரை சங்கிரமமாய் செய்து கதவு சாத்தி உடனே மறுநாள் செய்ய வேண்டிய நித்தியபூஜை வழிபாடுகளை கதவு திறப்பு முதல் முறையே தொடங்கிச் செய்யவேண்டுமென்பதாம்.

## உற்சவ காலங்களில் நித்திய பூஜை

ஆலயத்தில் திருவிழா நடைபெறும் போது காலையில் காலைசந்தி பூஜையானதும் யாகபூஜைமுடித்து ஸ்ரீபலி நித்யோற்சவம் உற்சவ வாஸ்துவீதி பலி முடித்த பின் மகாபலி பீடத்தில் பலி சமர்ப்பித்தும் உற் சவ மூர்த்திக்கு யாகசாலையில் ரக்ஷை சாத்தி தீபாராதனை முடித்து வீதி வலம் செய்தபின் ஆலயத்தில் திருவணுக்கண் மண்டப தீபாராதனை செய்த பின்னரே உச்சிக்கால பூஜை துவங்கவேண்டும் இக்காலத்திலேயே

உற்சவருக்கு வீதிவல பிராயச்சித்த பிற்காலாபிஷேகம் அல்லது மண்டகப்படி அபிஷேகம் நடைபெறச் செய்யவேண்டும். அல்லது சாயரக்ஷை அபிஷேகமாகவும் செய்யலாம். இரவில் சாயரக்ஷை இரண்டாங்கால பூஜை ஆனதும் யாகபூஜை முடித்து ஸ்ரீபலி முதல் வீதிவலம் வரை செய்தும் பிற்காலமென்ற பிராயச்சித்தாபிஷேம் செய்த பின்னரே அர்த்த ஜாமபூஜை துவங்கவேண்டும் இதுவே கிரமம். இவ் உற்சவ காலங்களில் பள்ளியறை பூஜையை உற்சவமாக கொள்ளா மல் சங்கிரமமாய் பூஜை முதலியன செய்ய வேண்டும் என்பதாம்.

## கிரஹண பூஜை

கிரஹணம் ஏற்படும்காலத்தில் தேவர்களுக்கு பூஜை, ஹோமம், பலி இவைகளைச் செய்ய வேண்டும் கிரஹணத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையும் தோஷகாலமாம். இதை நீக்கி புண்ணிய காலத்தில் நித்திய பூஜை முதலியவைகளைச் செய்ய வேண்டும்.

சூரிய கிரணத்திற்கு ஸ்பர்சகாலமும், சந்திரகிரஹணத்திற்கு விமோ சன காலமும் புண்ணியகாலமாம். இப்புண்ணிய காலத்தில் கிரஹ ணமத்தியிலேயே கிரஹணகால பூஜையை சிவாகம விதிப்படி செய்ய வேண்டுமென்பதாம்.

உற்சவமத்தியில் கிரஹணம் ஏற்படின் கிரஹண தீர்த்த வாரி கிடை யாது. உற்சவ பூர்த்தியன்று செய்யும் தீர்த்தவாரிக்குப் பின்பே மற்ற தீர்த் தம் கொடுத்தல் வேண்டும்.

## மார்கழி மாத உஷக்கால பூஜை

மார்கழி மாதத்தில் இரவு 25 நாழிகைக்கு மேல் 30 நாழிகைக்குள் உத்தம உஷக்காலம் ஆதலால் இரவு 25 நாழிகைக்கு பிறகு கோவில் திறக்கப்பட்டு திருப்பள்ளி எழுச்சி முதல் உஷக்கா ல பூஜை வரை முறையே செய்ய வேண்டும் இவ்வாறின்றி இரவு 2 மணி, 3மணி, அல்லது 4மணி 25 நாழிகைக்கு முன்பே சிலர் மனுர் மாச பூஜைக்காக கதவு

திறந்து பூஜை செய்வது விதிக்கு விரோதமேயாகும். இது உபசார மின்றி அபசாரமேயாகும். தருமபரிபாலகர் அதனைக் கவனித்து விதிப் படி 4மணி 25 நாழிகை அளவிற்கு முன்பு கதவு திறக்க அனுமதிக்காம லிருப்பது உத்தமச் செயலாகும்.

## நிருத்த மூர்த்தி அபிஷேக பூஜா காலம்

நடேசமூர்த்திக்கு மார்கழி மாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அபிஷேகித்து பூஜிப்பதானது, உஷக்கால பூஜையைக் குறிக்கும். மாசிமாத சுக்லபக்ஷ சதுர்த்தசியில் அபிஷேகித்து பூஜிப்பது காலசந்தி பூஜையாகும். சித்திரை மாத திருவோணநக்ஷத் திரத்தில் அபிஷேகித்து பூஜிப்பது உச்சிக்கால பூஜையாகும். ஆனிமாதம் உத்திர நக்ஷத்திரத்தில் அபிஷேகத்துடன் பூஜிப் பது சாயங்கால பூஜையாகும். ஆவணி மாத சுக்லபக்ஷ சதுர்தசியில் அபிஷேகித்து பூஜிப்பது இரண்டாம் காலமா கிய் இராத்திரி சந்தி பூஜையைக் குறிக்கும். புரட்டாசி மாத சுக்லபக்ஷ சதுர்தசியில் அபிஷேகித்து பூஜிப்பது அர்த்தஜாம பூஜையையும் குறிக் குமென்பதாம். இவ்வாறு நடேசரின் ஆறு அபிஷேகநாளை ஆறுகால பூஜையாக கூறுகின்றன.

இவைகளோடு மாதம் தோறும் வருகிற திருவாதிரை தினத்தில் அபிஷேகித்து வழிபடுதல் நைமித்தியத்தைக் குறிக்கும் என்பதாம்.

இதோடு உற்சவகாலங்களிலும், கிரஹண காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் செய்வதானது. நைமித்திய காமிய முதலினவற்றை யும் குறிக்கும்.

ஆகவே வருஷத்தில் ஆறுநாட்களே அபிஷேக ஆராதனை விதிக் கப்பட்டிருக்கிறதென்றும், மற்ற நாட்களில் செய்தல் கூடாதென்றும் ஒருசிலர் கூறுவது சாஸ்திர விதியின்படி பொருந்தாதென்பதாம்.

## தமிழ் வேதம் ஓதும் முறை

தினப் பூஜையில் சாயரக்ஷை காலத்திலும், விசேஷ உற்சவ காலங்க

ளிலும் பன்னிருதிருமுறை அல்லது பஞ்ச புரா ணம், மற்றக் காலங்க ளில் தேவாரம், பெரிய புராணம் ஆக இரண்டு பாடல்களும் ஓதல் வேண்டும் முருகன் ஆலயங்களில் இவற்றுடன்அருணகிரியார் அரு ளிய திருப்புகழும் இரவு பள்ளியறை பூஜையில் பொன்னூசலும் பாடி இறைவனை மகிழ்விக்க வேண்டும்.

மார்கழி மாத திருவாதிரை முடிவாக பத்துநாள் மாணிக்கவாசக சுவாமி உற்சவம் நடைபெறும். இந்த பத்து நாளையிலும் தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதாமல், திருவெம்பாவைப் பாடல்களையே எல்லா உபசார காலங்களிலும், தெய்வ மனுஷ்ய விழாக்களிலும் ஓதல் வேண்டும் இதுவே நம் முன்னோர் வகுத்த முறை. அதன்படியே நடை பெற்றும் வருகின்றது.

ஒவ்வொரு உற்சவ முடிவிலும் சூர்ணோற்சவ காலத்தில் திருவாசத் திலுள்ள திருப்பொற்ச் சுண்ணப்பதிகம் ஓதி, பதமந்திரத்துடன் சுண்ணம் இடித்தல் வேண்டும்.

இத்தெய்வ வழிப்பாட்டில் இந்த சிவனருட்பாக்களையே ஓதல் வேண்டும். மற்றும் இதர அருட்பாக்களை இத்துடன் கலக்காமல் தனி யாக ஒவ்வொருவரும் தம் தம் மனம் போல் துதியாக ஓதலாமேலேயொ ழிய, பூஜா வழிபாட்டில் கலத்தல் இறை அருள் பெற்ற வல்லார் வகுத்த நியதிக்கு மாறாகும் என்பதாம்.

## தமிழ் வேதம் ஓதும் காலங்கள்

அபிஷேகம், நிவேத்தியம், தூபம், பூஜையின் முடிவு இந்த நான்கு காலங்களிலும் தமிழ் வேதம் பண்ணுடன் ஓதல் மிக்க விசேஷமாகும்.

## தீபாராதனைக் குறிப்புகள்

1. பிரதான தீபத்திற்கு அலங்காரதீபமென்றும், புஷ்பதீபமென்றும், ரததீபமென்றும், பல்வேறு வகைப்பெயர் விளங்குகிறது. இது 3, 5, 7, 9, 11 ஆக இந்த ஐந்து வித அடுக்கு பேதங்களுடன் கூடியதாயிருக்கும்.

மூன்றடுக்கு தீபத்திற்கு 27 அல்லது 36 சுடரும், ஐந்தடுக்கு தீபத்திற்கு 51 சுடரும், ஏழடுக்கு தீபத்திற்கு 81 அல்லது 94 சுடரும், ஒன்பது அடுக்கு தீபத்திற்கு 108 சுடரும், பதினொரு அடுக்கு தீபத்திற்கு 121 சுடரும், இருக்க விதியுள்ளது. 11 அடுக்கு தீபாராதனை செய்யுங்காலத்து 11 மலத்தட்டு சக்திதீப முதலாகவும் 9 அடுக்கு தீபாராதனை காலத்தில் 9 மலத்தட்டு சக்தி தீப முதலாகவும் 5 அடுக்கு தீபாராதனை காலத்தில் 5 மலத் தட்டு சக்தி தீப முதலாகவும் 3 அடுக்கு தீபாராதனை காலத்தில் 3 மலத்தட்டு முதலாகவும் ஆராதனை செய்ய வேண்டுமென்றும் மலத்தட்டுகள் சக்தி என்றும் சிவத்திற்குத் தகுந்தவாறு சக்தி தீபமும் கூடுதலும் குறைதலும் ஆகுமென்று நூல்கள் கூறுகின்றன.

3 அடுக்கு தீபத்தில் 27 அல்லது 36 தீபச்சுடர் உள்ளதால் தத்துவாதீதர் என்றும், இருபத்தி ஏழு நக்ஷத்திரங்களிலும் நக்ஷத்திர பூஜாவிதிப்படி பூஜிக்கத் தகுந்தவர் என்றும் தாம் அதற்கு மகிழ்ந்து அனுக்ருஹஞ் செய்து கொண்டு நிற்பவன் என்பதையும் குறிக்கும்.

ஐந்தடுக்கு தீபத்தில் 51 சுடர் ஆல் ஐம்பத்தொரு அக்ஷரங்களையும், அங்கமாகக் கொண்டு அதற்கு மேல்தான் தனித்து நிற்பதையும், அவ் வக்ஷரங்களைத் தான்தோற்றிவைத்ததையும் குறிக்கும்.

ஏழடுக்கு தீபத்திற்கு 81 அல்லது 94 சுடர் ஆதலால் 81 - 91 பதங்களில் உள்ளவர்கள் செய்கின்ற வினைக்கீடாய்தான் அதற்கு மேம்பட்டு நின்று அவர்களுக்கு நிக்ஹானுக்கிரஹம் செய்பவன் என்பதைக் குறிக்கும்.

ஒன்பது அடுக்கு தீபத்தில் 108 சுடர் ஆதலால் 108 உருத்திரர்களுக்கும், அனுக்ருஹித்து அவர்களுக்கெல்லாம் மேலாய் மஹாருத்திரனாய் நிற்கும் நிலையைக் குறிக்கும்.

பதினொரு அடுக்கு தீபத்தில் 121 சுடர். ஆதலால் அதிருத்திரன், மஹாருத்திரன் முதலியவர்களுக்கு மேம்பட்டு நிற்கும் பரமசிவன் தான் என்பதைக் குறிக்கும்.

மூன்று அடுக்கு தத்துவங்களையும், ஐந்தடுக்கு பஞ்சகிருத்திய கார

ணேஸ்வரர்களையும், ஏழு அடுக்குகள் ஏழுவித சிவ பேதங்களையும், ஒன்பது அடுக்கு ஒன்பது வித சிவ பேதங்களையும், பதினொரு அடுக்கு ஏகாசருத்தர்களையும் குறிக்கும். இவைகளுக்குமேல் உச்சியில் தனித்திருக்கும் தீபம் மேலான பரமசிவத்தைக் குறிக்கும்.

இவ்வலங்கார தீபத்திற்கு அதிதேவதை உருத்திரன் (சிவன்)

1. இப்புஷ்ப தீபம் பரமேஸ்வரனை வழிபட்டு உய்ய வேண்டி புஷ்பமான தன்மையைக் குறிக்கும்.

2. சர்ப்ப தீபத்திற்கு அதிதேவதை நாகராஜர். இது குண்டலினீ சக்தியை மேலே நோக்கி செலுத்தினால் ஒளி வடிவான இறைவனைக் காணலாமென்பதைக் குறிக்கும்.

3. புருஷமிருகதீபத்திற்கு அதிதேவதை சரஸ்வதி. பரிசுத்தமான புருஷமிருகத்தின் சிரசில் தீபம் வைத்து ஜோதிக்கடவுளை வழிபடுவதால் மிருகத்தன்மை நீங்கி புருஸத் தன்மை பெறலாமென்பதைக் குறிக் கும்.

4. விருஷப தீபத்திற்கு அதிதேவதை விருஷபம், பசு தர்மம் அனுஷ்டித்து அதன் பலனால் பதிதர்மம் அனுஷ்டிக்க ஒளிவடிவான தத்துவத்தை தரிசிக்கலாமென்பதையும் குறிக்கும்.

5. கெஜ தீபத்திற்கு அதிதேவதை கணபதி. இது அகார, உகார, மகார வடிவமான பிரணவத்தின் தன்மையால் இறைவனை வழிபட்டு உய்யலாமென்பதையும், பஞ்சமூர்த்திகளில் முதல் மூர்த்தியான கணபதியை நினைத்து வழிபட்டவர்களுக்கு எல்லாவித விக்னங்களையும் போக்கி அருள் வழங்குவான் என்பதையும் குறிக்கும் .

6. வியாக்ர (புலி) தீபத்திற்கு அதிதேவதை பராசக்தி, பரமேஸ்வரரால் குறிப்பிடுகிற நியத்திற்க்கு மேல் இஷ்டரூபமாகச் செய்யப்படுகிற காரியங்களை இம்சிப்பதாக இவ்வியாக்ர தீபம் குறிக்கும்.

7. வாஜி (குதிரை) தீபத்திற்கு அதிதேவதை சோமன். இது வாசி என்பதை உஸ்வாச நிஸ்வாசத்துடன் விடாமல் ஜெபித்தல் அது சிவமாகும். அவற்றால் மிருகத்தன்மை அடையாலமென்பதை இக்குதிரை

தீபம் குறிக்கும்.

8. சிம்ம தீபத்திற்கு அதிதேவதை துர்க்கை. தேவர்களை எப்படி நம்மில் உயர்ந்தவர்களாக கருதுகிறோமோ, அப்படி நாமும் அஹங்காரம் முதலிய துர்க்குணங்களை சம்ஹாரஞ் செய்து உயர்ந்த மேன்மையை அடையலாமென்பதை இச்சிம்ம தீபம் குறிக்கும்.

9. ஹம்ச (அன்ன) தீபத்திற்கு அதிதேவதை பிரம்மா. இது அன்ன பக்ஷியானது எப்படி பாலுடன் கலந்த நீரை நீக்கி, பாலை மட்டும் அருந்துகின்றதோ அது போல் பசு தர்மங்களைச் செய்து அதை விட்டு சிவதர்மங்களைச் செய்ய வேண்டுமென்பதைக் குறிக் கும்.

10. குக்குட (கோழி) தீபத்திற்கு அதிதேவதை ஸ்கந்தர். இது ஓங்கார ரூபனான இறைவனை வழிபட்டால் மேலே உயர்த்துவான் என்பதைக் குறிக்கும்.

11. சக்தி தீபம் பதினொரு மலத்தட்டுக்கு அதிதேவதை 1 வாமை 2 ஜ்யேஷ்டை 3 சிரேஷ்டை 4 ரெளத்திரி 5 காலா 6 கலவிகாணீ 7. பல கரணீ 8. பலா 9 பலப்ரமதனீ 10 சர்வ பூதமணி 11 மனோன்மணி என்ற சக்திகளாகும்.

## நவசக்தி தீபம்

1 வாமை, பிருதிவி 2 ஜோஷ்டை, அப்பு (ஜலம்) 3 ரெளரீ, அக்னி, தேயு 4 காளி, வாயு 5 கலவிகரணி, ஆகாசம் 6 பல விசரணி சூரியன் 7 பலப்ரமதனீ, சந்திரன் 8 சர்வபூததமனீ, ஆன்மா 9 மனோமணீ, பராசக்தி அந்த பராசக்தியே, வாமாதி நவசக்தியாய் பவன் முதலிய மூர்த்திஸ்வரர்களோடும் ஒன்றுபட்டு பிருதிவியாதி எண்வகைச் சரீரங்களைப் பொருந்தி சிருஷ்டியாதி பஞ்கிருத்தியங்களை நடத்துகிறாள் என்பதை இந்த நவசக்தி தீபம் குறிக்கும்.

# சப்தமாத்ரு தீபம்

*1.பரவாகீஸ்வரி 2.அபரவாகீஸ்வரி 3.மனோன்மணி 4.மஹேஸ்வரீ 5.உமை 6.வைஷ்ணவி 7.பிராம்மீ*

*இவை ஏழுவகைச் சிவபேதங்களுக்கம் முறையே ஏழுவகைச் சக்திகளாம் என்தை இச் சப்தமாக்ரு தீபம் குறிக்கும்.*

# பஞ்ச தீபம்

*சிவசக்தியே பஞ்சகிருத்திய நிமித்தமாக கிருத்திய பேதத்தால் ஐவகைப்படும். அவைமுறையே பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியாசக்தி என்பதை இவ்வைந்து தீபம் குறிக்கும்.*

# திரிசக்தி தீபம்

*சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு பஞ்சகிருத்தியஞ் செய்வதற்கு முதற்காரணமான சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை அல்லது ஆரனீ, ஜெனனி, திரோதயித்ரி என்னும் மூவகைச் சக்திகளை இம்மூன்று தீபம் குறிக்கும்.*

# சிவசக்தி தீபம்

*சிவபெருமான் பஞ்சகிருத்தியஞ் செய்வதற்க்குத் துணைக் காரணமாய்க் கொண்ட சிவசக்தி என்பதை இவ்வகை தீபம் குறிக்கும்*

*12 கும்பதீபம் பஞ்சகிருத்தியத்தின் பொருட்டு எழுந்தருளிய நிமித்த காரணமாகிய நிஷ்கள சிவபெருமானைக் குறிக்கும். யாவும் தன்னுள் ஒடுங்கும் என்புதையும் தான் யாவற்றையும் சங்கற்ப மாத்திரையாய் சக்தியினிடமாகக் கொண்டு தோற்றுவிப்பவன் என்பதையும் இச்சக்தி தீப விஷயத்தில் கும்பதீபம் காட்டுகிறது.*

*ஆராத்திரிக பூர்ணகும்ப தீபவிஷயத்தில் சிவம் கும்பதீபமாகவும்*

ஈசானாதி ஐந்து முகங்களுடன் கூடியிருப்பதையும் குறிக்கிறது. சுவாமியின் பஞ்சாராத்திரிக பூஜையைப் போல் தேவிக்கும் பஞ்சாராத்திரிக பூஜை சக்திபராமாய் இருக்கிறது.

இது கர்மாவினுடைய திருப்தியையும், பரமேஸ்வரனுடைய நித்திய திருப்தியையும் குறிக்கும்.

13. **கூர்மதீபம்** : கூர்மதீபத்திற்கு அதிதேவதை விஷ்ணு. இதுபரமேஸ்வரனை அனன்ய பாவனையினால் காணலாம் என்று இவ்வாமை தீபம் குறிக்கும்.

14. **மேருதீபம்** : ஸ்ரீ மேருதீபத்திற்கு அதிதேவதை தேவி. இது கைலாச (சத்தின்) கிரியின் மேலுள்ளான் பரமசிவம் என்ற தன்மையை மேரு (மலை) தீபம் குறிக்கும்.

15. **நக்ஷத்திர தீபம்** : நக்ஷத்திர தீபத்திற்கு அதிதேவதை நக்ஷத்திரங்கள், நக்ஷத்திரங்களில் பூஜை உற்சவம் செய்தபலனை பரமேஸ்வரரால் அடையலாமன்பதை இந்த நக்ஷத்திர தீபம் குறிக்கும்.

16. **கற்பூர தீபம்** : கற்பூர தீபத்திற்கு அதிதேவதை தேவதேவன், கற்பூரமானது வெண்நிறத்தைப் பொருந்தி அக்னி பற்றியவிடத்தே அதன் வடிவாக விளங்கி ஒரு பற்றுமில்லாமல் முற்றும் கரையப்பெற்று ஆகாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்குவது போல் ஆன்மா வெண்மை நிறமான சாத்வீக குணத்தைப் பொருந்தி ஞானாக்னிபற்றியவிடத்தே பசுத்தன்மை நீங்கி, சிவத்தன்மை விளங்கப்பெற்று மூவகைச் சரீரங்கள் கரையப்பெற்று எல்லாப் பற்றுங் கழன்று சிதாகாசத்தோடு அத்துவிதமாய் பேரானந்தப் பெருவாழ்வு அடைதல் வேண்டுமென்னும் குறிப்பை உணர்த்துவதற்க்காக கற்பூர ஆராதனை செய்யப்படுகிறது.

1. தர்பணம் (கண்ணாடி) : இது பரமேஸ்வரனுடைய நிர்மலத் தன்மையைக் குறிக்கும்.
2. சத்தரம் (குடை) : இது பரமேஸ்வரனுடைய ஆணையைக் குறிக்கும்.
3. சாமரம் : இது நந்தியானது சுவாமிக்கு எதிராக நின்று

வாயுக்களுடைய சஞ்சாரத்தை உஸ்வாச நிஸ்வாசங்களை உபயசாமரங் குறிக்கும்.


4. வியஜனம் (விசிறி) : இது சுவாமியினிடத்தில் சராசரம் அசைந்து கொண்டிருக்கிறதை உணர்த்தும்.

5. துவஜம் (கொடி)

6. சுருட்டி

இவ்விரண்டும் பரமேஸ்வருக்குரிய சூரிய சந்திரர்களின் சேவகத் தன்மையைக் குறிக்கும் என்பதாம்.

# சுபமஸ்து



## வெளியீட்டு அனுசரணை

*** Super Shoes**
**154, நாவலர் வீதி யாழ்ப்பாணம்**

*** S.T.பரமேஸ்வரன்**
**(S.T.PARAMESWARAN & CO.(PVT) LTD)**

*** S.K.நாதன்**
**(Sole Agent For NPCL Products - Jaffna District)**

*** P.சிவசுப்பிரமணியம்**
**(B.M Textile)**

*** K.நந்தகுமார்**
**(கலைமகள் வர்த்தக நிலையம்)**



சிவநெறி தழைத்தோங்கிய ஈழமணித் திருநாட்டில் இன்று சைவ ஆலயங்கள் எழுச்சிபெற்று வருகின்றன. கடந்த கால அனர்த்தங்களின் விளைவாக சிதலமடைந்த ஆலயங்கள் யாவும் திருப்பணி வேலைகள் நடை பெற்று அழகொளிரும் ஆலயங்களாக விளங்குகின்றன.

விசேட நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் இவ் ஆலயங்களில் பெரு மளவில் பக்தர்கள் ஒன்றுகூடுகின்றனர். நித்திய, நைமித்திய பூஜைகள் குறைவின்றி நடைபெறுகின்ற போதிலும், இப் பூசை முறைகள் பற்றி இன்றைய இளைய தலைமுறையினரிடம் மட்டுமன்றி, பூசகர்களாகிய சிவா சாரியார்களிடத்திலும் போதிய விளக்கம் காணப்படுவதில்லை.

இத்தகைய சூழ்நிலையில் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் காலத்திற்கு ஏற்ற வகையில் "சைவாலய பரார்த்த பூஜா விளக்கம்" என்ற நூலை வெளி யிடுவது பொருத்தமானதே. இந்நூலில் நித்திய பூஜை விதிமுறைகள், அபி ஷேகம், அபிஷேகத்துக்குரிய பொருள்கள், நைவேத்தியம், தீபாராதனை, அருச்சனை போன்ற பல்வேறு விடயங்களும் விளக்கமாகக் கூறப்பட் டுள்ளன. விபூதி பிரசாதம் கொடுக்கும் முறை, வாங்கி அணியும் முறை, சண்டேஸ்வரர் வழிபாடு பற்றியும், கூறும் இந்நூல் திரையிட்டபின் வணங்கக் கூடாது என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றது.

இந்நூலை வெளியிட முன்வந்த அன்பர்களின் பணி பாராட்டுக்குரியது. சைவாபி மானிகள் அனைவரும் இந்நூலை வாங்கிப் படித்து பயன்பெறவேண்டும்.

தத்துவ கலாநிதி பண்டிதர் க.வைத்தீசுவரக்குருக்கள்,
ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்

தேவி Printers, Jaffna
021 300 3030